ISSN 2012 - 7286 பங்குனி – 2015

# கொழுந்து

39 மலையகத்திற்கு மகுடம் சூடும் மாசிகை



அகிம்சைப் போராளியின் வெற்றி

புதிய வெளிச்சம் பரவட்டும்

புதிதாய் எல்லாம் மலரட்டும்

இத்தலைகள் இணைந்தால் முத்து மழை பெய்யாதோ

மும்மூர்த்திகளுக்கு முடிசூட்டுவிழா – சிறப்பிதழ்



மங்கையர் மனம் மகிழ
மங்காத பொன் நகைகளை
மகிழ்வோடு பெறக்கூடிய
தங்க நகை மாளிகை.
சங்கீதா
ஜுவல்ஸ்
සංගීතා
ජුවල්ස්
V. GANESHAN
Proprietor
335-C
GALLE ROAD, WELLAWATTA, COLOMBO-06.
T.P: 011 2500682 | 011 2585321

# மலையக மண்ணின் மைந்தர்களுக்கு சிறப்புக் கௌரவம்

## மலையகத் தலைமைகளுக்கு தலைநகரில் கௌரவம்


தமிழ்க் கலைஞர் அபிவிருத்தி நிலையம்
நடத்தும்

## மூவேந்தர்களுக்கு முடிசூட்டுவிழா

**15.03.2015 ஞாயிற்றுக்கிழமை**
மாலை 4.30 மணிக்கு
ஐங்கரன் மண்டபத்தில்

*அன்புடன் அழைக்கின்றோம்.*

கொழுந்து அந்தனி ஜீவா
கலைஞர் கலைச்செல்வன்
(ஏற்பாட்டாளர்கள்)



**தலைமை :**
பேராசிரியர் சோ. சந்திரசேகரம்

**முன்னிலை :**
புரவலர் ஹாசிம் உமர்

**வாழ்த்துரைகள் :**

மாண்புமிகு மனோகணேஷன்
(தலைவர் - ஜனநாயக மக்கள் முன்னணி)
மேல் மாகாணசபை உறுப்பினர்

மாண்புமிகு வடிவேல் சுரேஷ்
(ஊவா மாகாண கல்வி அமைச்சர்)

மாண்புமிகு பி.பி. தேவராஜ்
(கோபியோ ஸ்தாபகத் தலைவர்)
முன்னாள் இராஜங்க அமைச்சர்

மாண்புமிகு வி. புத்திரசிகாமணி
முன்னாள் பிரதி நீதியமைச்சர்

மாண்புமிகு ஆசாத்சாலி
(தலைவர் - ஜனநாயக தேசிய முன்னணி)
மத்திய மாகாண சபை உறுப்பினர்

**கௌரவம் பெறுவோர் :**

மாண்புமிகு பழனி திகாம்பரம்
(தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர்)
தலைவர் - தேசிய தொழிலாளர் சங்கம்

மாண்புமிகு வி. இராதாகிருஷ்ணன்
(கல்வி இராஜாங்க அமைச்சர்)
தலைவர் மலையக மக்கள் முன்னணி

மாண்புமிகு கே. வேலாயுதம்
(பெருந்தோட்டத் தொழில்துறை இராஜாங்க அமைச்சர்)
தலைவர் - தேசிய தொழிலாளர்கள் சங்கம்

# பொன்மனச் செல்வியின் இல்லத் திருமண விழா

ஒரு திருமண விழாவை சிறப்பாக எப்படி நடத்துவது என்பதற்கு பொன்மனச் செல்வி கௌசலாதேவி கோவிந்தபிள்ளையின் இல்லத் திருமண விழா ஒருசான்று.

அழைப்பிதழ் வடிவமைக்கப்பட்ட முறை. மணமக்களை ஹோட்டல் ரமடாவின் கல்யாண மண்டபத்திற்கு அழைத்துவந்த விதம். மணமக்களை வரவேற்ற வாத்தியக் கலைஞர்கள் நடன மங்கையர்கள். அவர்கள் அணிந்திருந்த உடை. மற்றும் Wedding Cake அரசியல் தலைவர்கள். அமைச்சர்கள். அரசியல் வாதிகள். கலைஞர்கள். கவிஞர்கள். எழுத்தாளர்கள். ஊடகவியலாளர்கள். தொழிலதிபர்கள். வர்த்தகப்பிரமுகர்கள். மாப்பிள்ளை வீட்டார். பெண்வீட்டார் என சொந்த பந்தங்கள். அன்பர்கள். நண்பர்கள் என்று ஒரு பட்டாளமே படை எடுத்தது போன்று விருந்தினர் மண்டபம் காட்சியளித்தது.

விதவிதமான விருந்துகள். வித்தியாசமான இசை நிகழ்ச்சி. வியக்கவைத்த விருந்தினர்களின் நடனம். மொத்தத்தில் விருந்தினர்கள் வியந்தனர். நட்சத்திர ஹோட்டல் ரமடாவுக்கும் வியர்த்தது.

மணமகனின் தாயார் பொன்மனச் செல்வி கௌசலாதேவி. சகோதரி கோவிந்தபிள்ளை வினோதினி. மணமகளின் பெற்றோர் கோபாலபிள்ளை தம்பதிகள் பாராட்டுக்குரியவர்கள்.



**மணமகன் கௌசலதாசன் (M.B.A)**
**மணமகள் கார்த்திகாயினி (L.L.B)**

புதுமணத் தம்பதிகளை கொழுந்து வாழ்த்துகிறது.

# கொழுந்து

இதழ் - 39 - தை - சித்திரை - 2015


## பயணம் தொடர்கிறது....

கொழுந்து மீண்டும் வெளிவருகிறது... பலரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் கொழுந்து சஞ்சிகையை கொண்டு வருவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

மலையக இலக்கிய வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு வெளிவரும் கொழுந்து தன் பயணத்தை தொடர்கிறது.

மலையகத்தில் ஒரு புதிய மாற்றம் தென்படுகிறது. புதிய தலைமைகள் மலையகத்தை வழி நடத்த முன் வந்துள்ளன. இதுகாலவரை இல்லாத மாற்றம் ஏற்பட்டுள்ளது.

ஆட்சிமாற்றம், சர்வாதிகார ஆட்சிக்கு சாவுமணியடித்துள்ளது. மலையகத்தின் புதிய தலைமைகள் ஒற்றுமையாக செயல்பட்டு மலையக பெருந்தோட்டத்துறை மக்களின் கனவான வீடும், காணியும் நனவாக தொடங்கியுள்ளன.

முத்தான மூன்று பேர், ஆட்சியில் பங்காளியாகியுள்ளனர். அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்றுள்ள மூவரும் ஒற்றுமையாக ஒரே அணியாக செயல்படுவதை காணக்கூடியதாக உள்ளது. இந்த ஒற்றுமை தொடரவேண்டும்.

கொழுந்து சஞ்சிகையையும் தன் இலட்சிய நோக்குடன் தன் பயணத்தை தொடர்கிறது. மலையக கலை இலக்கியம் தனித்துவப் பாதையில் பயணிக்கச் செய்வதே புதிய அமைச்சர்களுக்கு முன்னால் உள்ள சவால் ஆகும்.

மலையக மக்களிடையே புதிய வெளிச்சம் பரவட்டும். புதிதாய் எல்லாம் மலரட்டும்.


வடிவமைப்பு
**கலைஞர் கலைச்செல்வன்**

கணனிப் பதிவு
**தி. அஜந்தன்**
(apekz design)



தொடர்புகளுக்கு
**அந்தனி ஜீவா**
ஆசிரியர்
இல: 57, மஹிந்த பிளேஸ், கொழும்பு-06.
கைப்பேசி: 077 6612315
மின்னஞ்சல்: kolundu@gmail.com


## வெந்தாடி வேந்தரே! வணக்கம்!



அதிகம் படிக்காத
அய்யாவை
நம்பினோம்
நமக்குப்
பல்கலைக் கழகங்கள்
கிடைத்தன!

பல்கலைக் கழகங்களில்
படித்த இவர்களை
நம்பினோம்
நமது
அரிச்சுவடிகளும்
தொலைந்து போயின

\- அறிவுமதி -

## வையத்தின் போக்கே மாறும்!

முனைவர். ம. நாராயணன்.

ஆளரவம் இல்லாத வீட்டிற் குள்ளே
அருவருக்கத் தக்கபல பூச்சி சேரும்
ஆளரம்பை போலழகு வாய்ந்த பெண்மை
ஆணவத்தால் அல்லலுறும்; தொல்லை சூழும் !
மேலாண்மை இல்லாத குடும்பம்; நல்ல
மேய்பனவன் இல்லாத மந்தை யாகும் !
தாளாண்மை இல்லாத செல்வம்; தக்க
சந்தர்ப்பம் வாய்க்காத கலைஞன் ஆகும்!

மோனைக்குப் பின்னால்தான் எதுகை தோன்றும் !
முதலிரவில் எல்லோர்க்கும் கூச்சம் தோன்றும்
தானைக்குப் பொறுப்பேற்கும் தொண்டர்க் கெல்லாம்
தலைசாய்ந்த பின்னால் தான் புகழே தோன்றும்
வீணைக்கும் விரலுக்கும் மோதல் வந்தால்
மீன்சந்தைக் கூச்சலின்றி இசையா தோன்றும் ?
வீணுக்கு உழைத்திளைத்து ஓடாய்ப் போனோர்
வெகுண்டெழுந்தால் வையத்தின் போக்கே மாறும்?

சர்வதேச மகளிர் தின சிறப்புக் கட்டுரை

# மலையகத்தின் முதற் பெண்மணி

# மீனாட்சி அம்மாள்



மலையகத்திலும் பல அமைப்புக்கள் இந்த சர்வதேச பெண்கள் தினத்தை கொண்டாடுகின்றனர். ஆனால் மலையக மக்களுக்காக குரல் கொடுத்த முதல் பெண்மணியை நினைவுகூற மறந்துவிடுகிறார்கள்.

இன்றைய இளந்தலைமுறைக்கு மீனாட்சி அம்மையார் யார் என்று தெரியாது. அவர்களுக்கு மாத்திரமல்ல நமது மலையகத்து தலைமைகளுக்கே இவரைப் பற்றி தெரியாது. ஏனெனில் படிக்காத தலைமை நம் மத்தியல் இருக்கும் வரை இதே நிலைமைதான். இலங்கையில் புகழ் பூத்த பெண்மணிகளில் ஒருவர் இவர். மலையக முதற் தொழிற்சங்க அமைப்பைத் தோற்றுவித்தவரும் இலங்கையின் மூத்த பத்திரிகையாளருமான கோ.நடேசய்யரின் துணைவியாவார். அம்மையார் தனது கணவருடன் இணைந்து தொழிற்சங்க, பத்திரிகை, சமுதாயப் பணிகளில் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

சட்டமிருக்குது ஏட்டிலே நம்முள் சக்தியிருக்குது கூட்டிலே பட்டமிருக்குது வஞ்சத்திலே வெள்ளையவர் உருக்குது நெஞ்சத்திலே வேலையிருக்கு நாட்டிலே உங்கள் வினையிருக்குது வீட்டிலே... என்று மீனாட்சியம்மையார் பாடிய தொழிலாளர் சட்டக் கும்மியை கேட்டு மெய்மறக்காதவர் யாருமில்லை. அது மாத்திரமில்லை. மகாகவி பாரதியாரின் பாடல்கள் மலையகமெங்கும் பாடிப்பரப்பிய பெருமைக்குரியவர் மீனாட்சி அம்மையார். தோட்டம் தோட்டமாகச் சென்று அம்மையார் பாரதியார் பாடல்களை பாட அதன் பின்னர் கோ.நடேசய்யர் பிரசங்கம் செய்வார். திருமதி. மீனாட்சியம்மையார் பாடுவதில் மாத்திரமல்ல, பாடல் எழுதுவதிலும் வல்லவர். இவர் எழுதிய பாடல் தொகுப்பு இந்தியர்களது இலங்கை வாழ்க்கை நிலை என்ற பெயரில் 1947 இல் வெளிவந்துள்ளது.

கோ. நடேசய்யர் தேசபக்தன் பத்திரிகை 1929 ஆம் ஆண்டு தினசரியாக வெளிவர ஆரம்பித்தது. நடேசய்யர் தொழிற்சங்க பணிகளுக்காக அடிக்கடி வெளியூர் சென்று விடுவதால் தேசபக்தன் பத்திரிகையை அச்சிடும் பொறுப்பை மீனாட்சியம்மையார் ஏற்றார். தேச பக்தன் பத்திரிகைகளில் அம்மையார் நிறைய எழுதினார். ஆசிரியர் தலையங்கங்கள் கூட எழுதியுள்ளார். ஸ்திரி பக்கம் என்று பெண்களுக்காக பத்திரிகைகளில் ஒரு பக்கத்தை ஒதுக்கி அவரே பொறுப்பாக இருந்து பெண்களின் விழிப்புணர்வுக்காகப் பல கட்டுரைகள் எழுதியுள்ளார்.

இலங்கையில் இந்தியர்களுக்காக அநீதிகள் இழைக்கப்படுமானால் அந்த அநீதிக்கு எதிராகப் போராடும் போராளிகளின் முன் வரிசையில் திருமதி. மீனாட்சியம்மையாரைக் காணலாம் எனக் கலாநிதி என்.எம்.பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

இந்தியர்களை ஆதரித்து அவர்களின் உரிமைக்காக 1939 ஆம் ஆண்டு மே மாதம் 27ம் திகதி பம்பலப்பிட்டி கதிரேசன் கோவில் முன்றலில் ஒரு கூட்டம் நடந்தது. இந்தக் கூட்டத்திலே கோ.நடேசய்யர், ஜி.ஜி.பொன்னம்பலம், ஏ.அஸிஸ், ஐ.எக்ஸ்.பெறைரா ஆகியோருடன் மீனாட்சியம்மாள் காரசாரமான கருத்துகளை தெரிவித்துள்ளார். இது பற்றி மறுநாள் வீரகேசரி பத்திரிகை முக்கியத்துவம் கொடுத்துச் செய்திகளைப் பிரசுரித்தது. மீனாட்சியம்மையார் எழுதுவதிலும், பேசுவதிலும் மட்டும் வல்லவராக விளங்கவில்லை. எதனையும் செயற்படுத்துவதில் தீவிரமாக இருந்துள்ளார்.

மகாகவி பாரதியாரின் பாடல்களில் அதிக ஈடுபாடு கொண்ட மீனாட்சி அம்மையார் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக வாழ்ந்துகாட்டினார். மலையகப் பெண்களின் முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர் மீனாட்சியம்மாள். அவரை ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச பெண்கள் தினத்தில் மலையக மக்கள் நினைவு கூற வேண்டும்.


**இப்பொழுது விற்பனையில் ..!**

தேசபந்து, தேசகீர்த்தி, தேசமான்ய, கலாநிதி, கலைமாமணி, புரட்சிப் புரவலர் போன்ற பலரகமான பட்டங்கள் 10ஆயிரம், 15ஆயிரம், 25ஆயிரம் 35ஆயிரம் என ஒவ்வொரு விலைகளில் விற்பனைக்கு உண்டு.

முன்னாள் அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, ஜீவன் குமாரதுங்க, ஜோன் செனவிரத்ன போன்றோரின் கையொப்பத்துடன் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

சிறப்புத் தள்ளுபடி:

மூன்று பட்டங்களை பெறவிரும்புவோர்க்கு 30% வீதக் கழிவு உண்டு, இரண்டை மட்டும் பெறுவோர்க்கு 20% வீதக் கழிவு, ஒன்றை மட்டும் பெறுவதாயின் விஷேட கழிவுகள் கிடையாது. மேலதிக விபரங்கள் அடுத்த இதழில்.


சிங்கப்பூர், மலேசிய நாடுகளில் சிறிய குடும்பத்திற்கு அளவான வீடு
"STUDIO TYPE CONDOMINIUM FLAT" தற்போது நமது இலங்கையில்
MANCHESTER CITY
கொழும்பு 15
மட்டக்குளியில்
வீடொன்று
ரூ. 1,585,000/- க்கு
(பதினைந்து இலட்சத்து எண்பத்தையாயிரம் மட்டுமே)
ரு 5,000/= செலுத்தி
இன்றே வீட்டை
தேர்வு செய்யுங்கள்
இரு வருட நிர்மாண காலப்பகுதியில்
இலகு தவணை முறையில் செலுத்தி
இரு வருடங்களின் பின் குடிபுகலாம்.
இரண்டு அறைகளைக் கொண்ட வீட்டுடன்
குளியலறை, வரவேற்பறை மற்றும் பான்றி
விருந்தினர் குளியலறையுடன் கூடியது.
NIMAVIN
DEVELOPERS
Nimavin Developers (Pvt) Ltd
187, Ward Place, Colombo-07.
Visit Our Web Site: www.nimavingreenpark.com
(011) 269 5714, (011) 269 5728
(கிழமை நாட்களில்
மு.ப 9.00 - பி.ப 5.00 மணி வரை)
தொ.இல.:
0776 959197
(தமிழில்)
0776 147065
(ஆங்கிலத்தில்)
0776 216016
(சிங்களத்தில்)
எமது வலைத்தளத்தில் பார்வையிட: www.nimavingreenpark.com

# ஈழத்தின் முதல் அரசியல் நாடகாசிரியர் நடேசய்யர்

- கலாநிதி .மு. நித்தியானந்தம் -

வெறும் பிரசுர வெளியீடுகள். அவை எத்தகையனவாயிருந்தாலும் அவற்றைப் பற்றி நாம் அவ்வளவு அக்கறைப்பட்டுக கொள்ளத் தேவையில்லை. ஆனால் அவை நாடக அரங்கத்தில் பிரதிபலிக்கும் போது. நாம் அவற்றின் மீது விசேஷ அக்கறை செலுத்த வேண்டியிருக்கிறது. வேறு எந்த வெளியீட்டுச் சாதனங்களை விடவும். நாடக மேடையில் அவை நிகழ்த்திக் காண்பிக்கப்படும் போது, அவை கருத்துக்களைத் தாங்கிச் செல்லும் விதம் ஏனையவற்றிலிருந்து முற்றாக வேறுபடுகிறது. பல அம்சங்களுடன் சேர்ந்த அவை. பார்ப்பவர் மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தவல்லதாக உள்ளது. பிரசுர வெளியீடுகள் சம் பந்



தமாக நம்மிடம் இப்போதுள்ள சட்டமானது. ஒருபோதும் மேடை அரங்கிற்கு போதுமானவை அல்ல.

பிரிட்டிஷ் காலனித்துவ. இந்திய நிர்வாகத்துறையில் ஜொலிக்கும் தாரகையாகத் திகழ்ந்த சேர் ரிச்சர்ட் ரெம்பிள் (Sir. Richard Temple) வங்காளத்தின சர்வ வல்லமை படைத்த லெப்டினன்ட் கவர்னராக இருந்தபோது வெளியிட்ட அபாய அறிவிப்பு இது.

மேற்கு வங்காளத்தில் நீல நிறச் சாயத் தொழிலுக்காக அவரிச் செடிப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்த ஆங்கிலேயத் துரைமாரின் ஈவிரக்கமற்ற சுரண்டல் நடவடிக்கைகளுக்கு எதிராகவும், கிராம விவசாயிகள் தம் விவசாய நிலங்களில் வர்த்தகப்பயிருக்காக நிர்ப்பந்திக்கப்படுவதை வெளிப்படுத்தியும். லக்னோவில் ஒரு குடியானவப் பெண்மீது வெள்ளைத்துரை பாலியல் வன்முறையைப் பிரயோகித்ததை எதிர்த்தும் 1860 இல் மேடையேறிய அவரித் தோட்டத் துரைமாரின் நிலைக்கண்ணாடி (The Mirror of Indigo Planters) என்ற நாடகம் ஆளும் வெள்ளை இனத்தின் மத்தியில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது.

வங்காள மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு இந்நாடகத்தை மொழிபெயர்த்த கிறிஸ்தவ மிஷனரியான ஜேம்ஸ் லோங் மீது வழக்குத் தொடரப்பட்டு. இந்தத் தேசவிரோத நாடகத்தை மொழிபெயர்த்ததற்காக அவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அசாம் தேயிலைத் தோட்டங்களில் காட்டு தர்பார் நடத்திய தோட்டத்துரைமார், தோட்டத் தொழிலாளர் மீது மேற்கொண்ட குரூர அடக்குமுறைகளை வெளிப்படுத்தி, சரண் சட்டோபாத்யாய எழுதி 1875 இல் மேடையேறிய, தேயிலைத் தோட்டத்துரைமாரின் நிலைக்கண்ணாடி (The Mirror of Indigo Planters) என்ற நாடகமானது. காலனித்துவத்திற்கு எதிரான வலிமையான ஆயுதமாக நாடகங்கள் செயற்படும் அபாயச்சங்காக வெள்ளை அதிகாரவர்க்கத்தினருக்கு ஒலித்தது.

இவற்றைத் தொடர்ந்து நாடகாசிரியர்கள் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களை வெளிப்படையாகத் தாக்குவதை சட்டவிரோதமாக்கும் 1876 ஆம் ஆண்டின் நாடக அரங்காற்றுகைச் சட்டம் (Dramatic Performance Act of 1876) அவசர அவசரமாக அமுலாக்கப்பட்டது.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான நாடக மேடையேற்றங்களைத் தடைசெய்து. சட்டமியற்றி அறுபது ஆண்டுகளின் பின், தேயிலைத் தோட்டங்களிலிருந்து எதிர்க்குரல் எழுப்பும் புரட்சிகர நாடகாசிரியராக நடேசய்யரை 1930 களில் காண்கிறோம்.

1937 ஆம் ஆண்டு கொழும்பில் வெளியான "இந்தியத் தொழிலாளர் அந்தரப்பிழைப்பு நாடகம்" என்ற நாடகநூலின் முன்னுரையில் நடேசய்யர் பின்வருமாறு எழுதுகிறார். "இந்தியவும் சரி, இலங்கை, மலாய் நாடுகளும் சரி, பிரிட்டிஷ் முதலாளிகளுடைய சௌகரியத்திற்காக ஆட்சி செய்யப்படுகிறதென்பது மிகையாகாது. இலங்கை, மலாய் நாடுகளிலுள்ள நிலங்களை இந்தியத் தொழிலாளர்களைக் கொண்டு பண்படுத்தி இருநாட்டவருக்குமில்லாமல் 6000 மைல்களுக்கப்பாலுள்ள ஒரு நாட்டிற்கு கொண்டு போகப்படுகிறது என்பது உண்மை. இந்நாடுகளில் இருந்துவரும் அரசியல்முறை காரணமாக ஐரோப்பிய வர்க்கத்திற்கு விரோதமாகச் செய்யப்படும் எவ்விதக் கிளர்ச்சியும் பலனற்றதாகப் போய்விடும். ஆகவே, அந்நியநாடு சென்றுள்ள இந்தியர்கள் சார்பாக இதுவரை இந்தியத் தலைவர்களால் செய்யப்பட்ட கிளர்ச்சிகளெல்லாம் பயனற்றவையாயின என்பது வெளிப்படை".

ஆகவே, இந்தியத் தொழிலாளர்கள் பிறநாடுகளில் அவஸ்தைப்படாதிருக்க வேண்டுமானால், அவர்களுடைய கேவலமான நிலையை அவர்களும் தென்னிந்தியாவில் உள்ள அவர்களது உறவினர்களும், உள்ளங்கை நெல்லிக் கனிபோல் அறியக் கூடியதாயிருக்க வேண்டும். தென்னிந்தியாவிலுள்ள கிராமவாசிகள் தங்களுடைய உறவினர்கள் அந்நியநாடுகளில் கண்டுள்ள வாழ்க்கையை எவ்விதம் மென்மேலும் விருத்தி செய்து கொள்ளலாம் என்பதையும் அறியக் கூடியவிதமாய், பிரசாரம் செய்யவேண்டியது அவசியமாய் விட்டது.

அரை நூற்றாண்டிற்கு முன்னால் சேர். ரிச்சர்ட் ரெம்பிள், நாடகமேடையேற்றங்கள் ஏனைய சாதனங்களை விட பிரிட்டிஷ் நலன்களுக்கு எவ்வளவு அபாயமானது என்ற அச்சமுற்றாரோ,

அந்த அளவு நாடகமேடையேற்றத்தின் வீரியத்தை உணர்ந்தவராக நடேசய்யர் பேசுகிறார்.

இந்த நாடக முன்னுரைக் குறிப்பில் நடேசய்யர் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "பொது சனங்களுடைய உணர்ச்சியைக் கிளப்ப மூவகைச் சாதனங்களுண்டு. பிரசுரங்கள் மூலம் உண்டாக்குவது முதலாவது. பத்திரிகைகளும், புஸ்தகங்களும், வேறு பிரசுரங்களும் ஒருவாறு பலங்கொடுக்கும். எனினும், போதிய அளவு கொடுக்கும் என எண்ண இடமில்லை. நமது நாட்டில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை மிகச் சொற்பம். இனாமாய்த் துண்டுப் பிரசுரம் வெளியிட்டுப் பரப்புவதற்காகச் செலவாகும் தொகைக்குத் தக்க பலன் கிடைக்குமென்பதே சந்தேகம்".

பிரசங்கங்கள் மூலம் அறிவைப் பரப்புவது இரண்டாவது ஆகும். பிரசுரங்களைவிட பிரசங்கங்கள் அதிக உணர்ச்சியை உண்டாக்குமெனினும், அதுவும் போதிய பலனைக் கொடுக்கும் என்று எண்ண இடமில்லை. மூன்றாவதாக, நமக்குள்ள சாதனங்கள் நாடகம் ஆகும். நமது நாட்டில் ஒவ்வொரு கிராமத்திலும். கோவில் திருவிழாக் காலங்களில் பள்ளு பாடிக் காப்புக் கட்டுவது என்ற புராதன வழக்கம் இன்றும் இருந்து வருகிறது. பூர்வீக முறைப்படி பள்ளு நாடகம் நடத்தப்படா விட்டாலும், அந்தப் பெயர் கொண்டு, ஏதோ ஒரு பாட்டைப்பாடிக் காரியங்கள் முடிக்கும் வழக்கமிருக்கிறது. அவ்வித சந்தர்ப்பங்களில், பிற நாடுகளுக்குச் சென்றவர்களின் பரிதாபநிலையை உள்ளது உள்ளபடி காடடக்கூடிய முறையில் நாடகங்கள் நடித்திக்காட்ட ஏற்பாடுகள் செய்யப்படுவதுடன், அவர்களுடைய செல்வநிலைமையை உயர்த்துவதற்கான காரியங்களும் கைக்கொள்ளப்படுமானால் இந்தியக் கிராம வாசிகள் சீக்கிரம் விருத்தியடைவார்கள் என்பது திண்ணம்.

"அவரித்தோட்டத் துரைமாரின் நிலைக்கண்ணாடி" நாடகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தற்காக குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் தன் வாதத்தை வலியுறுத்திய கிறிஸ்தவப் பாதிரியாரான ஜேம்ஸ் லோங், இந்துக்களைப் பொறுத்தவரையில் நாடகமானது தங்கள் சமூகத்தின் சில நிலைமைகள், நடைமுறைகள், வழக்காறுகள் என்பனவற்றை விபரிப்பதற்கு அவர்களுக்குகந்த சாதனமாகத் திகழ்கிறது என்று குறிப்பிட்டிருப்பதை நோக்குவது பொருந்தும்.

கல்வியறிவு குறைந்த தோட்டத்தொழிலாளர்களை அரசியல் மயப்படுத்துவதற்குரிய சாதனங்கள் குறித்து நடேசய்யர் மிகத்தெளிவான பார்வையைக் கொண்டிருப்பதை இங்கு அறியமுடிகிறது. அவர்களின் சமூகநிலையை அவர்களுக்கு விளக்கி விடுதலைக்கான வழிவகைகளை விபரித்து அவர்களைச் செயலூக்கம் கொண்டவர்களாக்க முடியும் என்று பெரும் நம்பிக்கை கொண்டவராக நடேசய்யர் திகழ்ந்திருக்கிறார்.

1915இல் கொழும்பில் தமிழ் அமெச்சூர் நாடக மன்றம் அமைக்கப்பட்டு, ஆங்கிலம் அரசாங்க ஊழியர்கள் பம்மல் சம்பந்த முதலியாரின் நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றிக் கொண்டிருந்த காலம் அது... நாடகம் சமூகத்தின் உயர்மட்ட மக்களுக்கான பொழுதுபோக்கு நிகழ்வாகக் கருதப்பட்டிருந்தது. ஷேக்ஸ்பியரின் ஆங்கில நாடகங்களைத் தழுவி எழுதப்பட்ட தமிழ் நாடகங்கள் வரவேற்புக்க்குரிய கனவாக இருந்தன. புராண இதிகாசக் கதைகளை ஆதாரமாகக் கொண்ட நாடக மேடையேற்றங்களே முக்கிய போக்காக அமைந்திருந்தன.

1917 இல் யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமம் கனகசபை இயற்றிய "நற்குணன்: 1928 ல் வித்வான் க. இராமலிங்கம் இயற்றிய "நமசிவாயம்" அல்லது "நான் யார்" : 1936 இல் நவாலியூர் க. சோமசுந்தரப்புலவர் இயற்றிய "உயிரிளங்குமரன்" 1973 இல் சு. செல்வநாயகம் எழுதிய "சாமளா" அல்லது "இன்பத்தில் துன்பம்" ஆகிய நாடக எழுத்து அன்றைய நாடகப் போக்கினை கோடிட்டுக் காட்டின.


அன்றாடம் உழைத்து அல்லலுறும் விவசாயிகள், தொழிலாளர்கள், சுரண்டப்படுவோரின் பிரச்சிரனைகளுக்கும் இந்த நாடகங்களுக்கும் துளிகூட சம்பந்தமில்லை. இயற்றியவர்கள் தமது சைவசித்தாந்த அறிவினையும் பாபுனையும் வெளிப்படுத்தும் கருவியாக நாடகங்களைக் கருதியிருந்த நிலையில், தோட்டத் தொழிலாளர்களின் அந்தரப்பிழைப்பு வாழ்க்கையை அவர்களின் பேச்சு மொழியில் நாடகமாக்கிய நடேசய்யர் வஞ்சிக்கப்பட்ட மக்களின் குரலை நாடக உலகிற்கு எடுத்துச் செல்ல முனைந்த புரட்சிக் காரராகவே தென்படுகிறார்.

இந் நாடகத்தில் உள்ள பாடல்கள் சந்தச்சரபம் உடுமலை, முத்துசாமிக் கவிராயரன் மாணவியும், ஆசிரியரின் பெண்சாதியுமான ஸ்ரீமதி.கோ.ந.மீனாட்சி இயற்றியவையாகும் என்ற குறிப்பு நூலில் காணப்படுகிறது. உடுமலை முத்துசாமிக்கவிராயர் தேசியக் கவியாகத் திகழ்ந்து அக்கால கட்டத்தில் மேடையேறிய நாடகங்களுக்கான இசைப்பாடல்களை இயற்றிய புகழ்பெற்றவராவர். மிக்க பழனி தண்டபாணிப் பிள்ளையிடம் பயின்று பின்னாளில் தமிழ்நாட்டின் சிற்பிகளாகப் பிரபல்யம் பெற்ற சங்கரதாஸ் சுவாமிகள், முத்துசாமிக்கவிராயர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். உடுமலை நாராயணகவி தனது ஆரம்பக் கல்வியை நான்காம் வகுப்போடு முடித்தபின், அவருக்குக் குருவாக இருந்தவர் சாமிக்கவிராயர் 1921 இல் காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தி சென்னையில் நுழையாமைப் போராட்டத்தில் இறங்கியபோது, அவருக்கு ஆதரவாக நடிகரும் பக்தருமான எம்.எம். சிதப்பரநாதன் நாடகங்களை மேடையேற்றி, நாடக போராட்டத்திற்கு வழங்கும் பணியில் உழைத்தவர் உடுமலை முத்துசாமிக்கவிராயர்.

இத்தகைய ஆளுமை மிகுந்த சந்தச்சரபம் உடுமலை முத்துசாமிக்கவிராயரின் மாணவியாக இருந்த மீனாட்சியம்மாள் கவிராயரின் தேசப்பக்தியினாலும் ஆகர்ஷிக்கப்பட்டிருப்பார் என்பதில் ஐயமில்லை. மீனாட்சி அம்மாளின் பாடல்களில் வெள்ளையரின் ஆதிக்கம், சுரண்டல் என்பனவற்றிற்கு எதிரான கருத்துகள் தீப்பொறிகளாக சிதறுவதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. கீர்த்தனைகளாகவும், ஏனைய சிறு நாடகப் பாடல்களாகவும் மீனாட்சி அம்மாளின் ஐம்பது பாடல்கள் இந்த 130 பக்க நூலில் இடம்பெற்றுள்ளன.

பாமரமக்களும் விளங்கிக்கொள்ளும் மொழியிலும், இசைப்பாடலிலும் அரசியல் நாடகமாக உருப்பெற்றுள்ள இந்தியத் தொழிலாளர்களின் அந்தரப்பிழைப்பு நாடகம் மேடை யேற்றப்பட்டதற்கான ஆதாரங்கள் எதுவும் தென்படவில்லை. ஆனால் நாடக இலக்கிய வரலாற்றில் இந்நாடகம் தனி அந்தஸ்தினைக் கோரிநிற்கிறது.

இந்த நாடகத்திற்கு நடேசய்யர் எழுதியிருக்கும் முகவுரை இலங்கையின் வாழும் இந்தியத் தொழிலாளர்களின் நிலைமை பற்றிய அரசியல் பிரகடனமாகும். இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரும் தோட்டத் தொழிலாளர்கள் ஆசைவார்த்தை காட்டி, ஏமாற்றப்பட்டுக் கடத்தப்பட்டு வருபவர்கள்தானே தவிர, தமது சுயவிருப்பின் தெரிவில் வருபவர்கள் அல்லர் என்பதை நடேசய்யர் இந்நாடக நூலில் ஆணித்தரமாக வலியுறுத்துகிறார். இந்தத் தோட்டத் தொழிலாளர்கள், ஏமாற்றப்பட்டு, வஞ்சிக்கப் பட்டவர்கள் என்பது தான் நடேசய்யர் இந்நூலில் உணர்த்த விரும்பும் உண்மையாகும்.



## தமிழ்க் கலைஞர் அபிவிருத்தி நிலையம்

# கல்வி இராஜாங்க அமைச்சரிடம் கையளித்த மகஜர்.

பிரதி கல்வி அமைச்சர், மாண்பமை வீ.இராதாகிருஷ்ணன் அவர்களை தமிழ்க் கலைஞர் அபிவிருத்தி நிலையத்தின் நிர்வாகக் குழவினர் 10.02.2015 அன்று அமைச்சில் சந்தித்தனர். கலாநிலையத்தின் தலைவர் கலைஞர் கலைச்செலவன், செயலாளர் அந்தனி ஜீவா, தேசிய அமைப்பாளர் எஸ்.மோகன்ராஜ் ஆகியோர் நாடகமும் அரங்கியலும் தொடர்பான மகஜர் ஒன்றை அமைச்சரிடம் கையளித்தனர். அம்மகஜரின் விபரங்கள் வருமாறு.

**கோரிக்கைகள்:**

1. நாடகமும் அரங்கியலும் இன்று 06 ஆம் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரை ஒரு பாடமாக இருந்தபோதிலும், மாத்தளை தேசிய கல்லூரியைத் தவிர மலையகத்தில் வேறெந்த பாடசாலைகளிலும் கற்பிக்கப்படுவதில்லை. தலைநகரிலும் இதே நிலைதான். எனவே வடகிழக்குக்கு வெளியே உள்ள தமிழ்மொழிமூல பாடசாலைகளில் நாடகமும் அரங்கியலும் பயிற்றுவிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

2. நாடகமும் அரங்கியலும் கற்கைநெறியாக மட்டும் இருப்பதால் செயல் திறன் சார் கல்வியாக மாற்றம் பெறவில்லை. அதனால் கடந்த 35 ஆண்டுகளாக கலைஞர்கள் உருவாகவில்லை. எனவே.... இளந்தலைமுறையினரிடத்தில் நாடகவாக்கத்திறன், படைப்பாக்கத்திறன் விருத்தி செய்யப்பட வேண்டும். இதற்காக வாரநாட்களில் தமிழ், சிங்கள நாடக விற்பன்னர்களைக் கொண்டு பயிலரங்குகள் நடத்தப்படல் வேண்டும்.

3. நாடகமும் அரங்கிலும் தொடர்பான பாடத்திட்டத்திலும் குறிப்பாக பாடநூலிலும் மாற்றம் செய்தல் வேண்டும். ஏனெனில் இது குறிப்பிட்ட பிரதேசத்தையும், குறிப்பிட்ட கலைஞர்களையும் மட்டுமே உள்வாங்கி இருக்கிறது. இலங்கையின் தமிழ் நாடக வரலாறு பயிலும் மாணவர்களுக்கு ஒரு புரியாத புதிராகவே இருப்பதால் பாடநூல் ஆக்கக் குழுவில் மலையகம் தலைநகர் சார் கலைஞர்களுடன் பேராசிரியர்களான சோ. சந்திரசேகரன், சபா. ஜெயராசா போன்றோரையும் இணைத்தல் வேண்டும்.

4. நாடக நூல்களை கொள்வனவு செய்து, ஒவ்வொரு பாடசாலை நூலகங்களுக்கும் விநியோகித்தல் வேண்டும். நூலகங்கள் இல்லாத பாடசாலைகளில் நூலகங்களை நிர்மாணிக்க வேண்டும் குறிப்பிட்ட ஒரு நேரத்தை நூலகங்களில் கழிப்பதற்கும் மாணவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும்.

5. இன்றைய நவீனயுக மாற்றங்களுக் கேற்ப எமது ஆற்றுகைகளும் அரங்குகளும் மாற்றம் பெறவேண்டும். அதனால் சிறந்த நவீன நாடகங்களை/மொழிபெயர்ப்பு நாடகங்களை அச்சிடுதல் வேண்டும்.

6. சிறந்த சிறுவர் நாடகங்களை / பரிசு பெற்ற சிங்கள நாடகங்களை பள்ளிக்கூடங்களில் அரங்கேற்ற வேண்டும். சிறுவர் நாடகங்களைத் தயாரிக்கும் ஆசிரிய, ஆசிரியைகளுக்காக பயிற்சிப்பட்டறைகளை நடத்துதல் வேண்டும். இது கலாச்சார அமைச்சினூடாக இல்லாமல் கல்வி அமைச்சினூடாகவே நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

7. தமிழ்த்தின விழாவில் இடம் பெறும் நாடகப் போட்டிகளை அந்தந்த மாவட்டங்களை / மாகாணங்களை சேர்ந்த நடுவர்கள் பார்வையிட்டாலும் தேசிய மட்டத்திற்கு வருகின்ற போது வடக்கு, கிழக்கு, மலையகம், தலைநகர் சார்ந்த நாடக அறிஞர்களை நடுவர்களாக நியமித்தல் வேண்டும்.

8. கொழும்பு நகரிலுள்ள தமிழ்மொழி மூலமான பாடசாலைகளில் உள்ள குறைபாடுகள், தேவைகள், பிரச்சினைகளைக் கண்டறிய, கௌரவ சேவையாகக் கருதி செயற்படக்கூடிய ஒருவருக்கு "மாண்புமிகு - அமைச்சரின் கொழும்பு நகர இணைப்புச் செயலர்" - எனும் நியமனத்தை வழங்கி, நீண்டகால பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதல் வேண்டும்.

9. வடக்கு கிழக்கிலுள்ள கலைஞர்களை / நாடகச் செயற்பாட்டாளர்களை அங்குள்ள பல்கலைக் கழகங்கள் கௌரவிக்கின்றன. தலைக்கோல் விருதுகள் வழங்கி கௌரவிக்கின்றன. இது மலையகம் தலைநகர் சார் கலைஞர்களுக்கு ஒரு பகற்கனவாகவே இருக்கிறது. இக்குறையை நீக்குவதற்கு பேராதனை பல்கலைக் கழகத்தினூடாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் அல்லது மலையகத்திற்கென ஒரு தனிப் பல்கலைக்கழகம் அமைத்தல் வேண்டும்.

இவைகளை நடைமுறைப்படுத்த இலங்கைத் தமிழ்க் கலைஞர் அபிவிருத்தி நிலையம் தனது ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்க தயாராக இருக்கிறது என்பதையும் அமைச்சரிடம் எடுத்துரைத்தனர்.

இந்த மகஜரை கவனத்திற்கு எடுத்த அமைச்சர் 100நாள் வேலைத்திட்டத்தின் பின்னர் உடனடி நடவடிக்கை எடுப்பதாக இலங்கை தேசிய கலா நிலையத்திற்கு அனுப்பிவைத்துள்ள பதிலில் தெரிவித்துள்ளார்.

# “பெண்சிங்கம்” கிளாரா ஜெட்கின்



ஆண்டு தோறும் மார்ச் 8ம் திகதி சர்வதேச பெண்கள் தினமாக கொண்டாடப்படுகிறது. ஆனால் பெண்களின் உரிமை தினத்தன்று வித்திட்டவர் யார் என்பது பலருக்குத் தெரியாது சர்வதேச பெண்கள் தினமாகிய மார்ச் 8ம் திகதியை கொண்டாடுவதற்கு காரணமாக இருந்தவர் பெண்சிங்கம் எனப் பாராட்டப்பட்ட கிளாரா ஜெட்கின் என்பவர். ஜெர்மனி நாடானது உலகிற்கு உன்னதமான பல மேதைகளை தந்துள்ளது மாமேதை கார்ல்மார்க்ஸ், ரோஸா லக்சம் பேர்க் கவிஞர் கதே நாடகமேதை பேர்டோல் பிரக்ட் இப்படிப்பட்ட மேதைகளின் வரிசையில் இருந்தவர் தான் கிளாரா ஜெட்கின். ஜெர்மனியில் சாக்சனி மாநிலத்தின் அருகே உள்ள கிராமத்தில 1957ம் ஆண்டு ஜீலை 5ம் திகதி கிளாரா பிறந்தார். தந்தை எய்ஸனர் ஓர் ஆரம்ப பள்ளிக்கூட ஆசிரியர். கிளாரா தனது 17 வது வயதில் லிப்சிக் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் படித்தார். படிக்கும் போது லீப்சிக் நகரில் இயங்கி வந்த புரட்சிகர சோசலிஸ்ட் மாணவர் அமைப்புடன் தொடர்பு வைத்திருந்தார்.

1870 முதல் ஜெர்மனிய சோசலிச இயக்கத்தில் கிளாரா தீவிரமாக செயல்பட தொடங்கினார். 1881 இல் சோசலிஸ்ட்களுக்கு எதிராக பிஸ்மார்க் கொண்டு வந்த தடைச்சட்டம் அமுலிலிருந்த போது கிளாரா ஜெர்மனிய சமூக ஜனநாயகக் கட்சியில் உறுப்பினரானார். அதைத் தொடர்ந்து கட்சியில் தலைமறைவு மணிகளில் ஈடுபட்டார். ஜெர்மனிக்கு குடிபெயர்ந்தவர்களுடன் கிளாராவுக்கு தொடர்பு ஏற்பட்டது. இத்தொடர்பின் பயனாய் ஓசிப் ஜெட்கின் என்பவரை கிளாரா திருமணம் செய்தார். விரும்பத்தகாத அந்நியர் என ஓசிப ஜெட்கின் நாடு கடத்தப்பட்ட பொழுது கிளாராவும் அவரது கணவர் ஜெட்கினும் அரசியல் அகதிகளாக வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. கிளாரா பிரான்ஸ், ஆஸ்திரியா, இத்தாலி போன்ற நாடுகளின் சோசலிச இயக்கங்களில் பங்குபற்றினார். பாரிசில் தங்கியிருந்த காலங்களில் மாமேதை கார்ல்மாக்ஸின் மகள் லாராபார்க்குடன் பிரான்ஸ் சோசலிச இயக்கத்தவர்களுடன் இணைந்து செயல்பட்டார். இரண்டாம் அகிலத்தை நிறுவும் பேரயாம் பாரிஸ் நகரத்தின் 1889 இல் நடைபெற்றது. இதன் அமைப்பாளராக கிளாரா செயல்பட்டார். பாட்டாளி வர்க்கப் பெண்கள். இயக்கத்திற்கான அவசியப் போராட்டத்தில் பெண்கள் பங்கு குறித்துப் பேசினார். சோசலிச தொழிலாளர்களுடன் ஒன்றிணைந்து பெண்கள் போரடும் எவ்வித தியாகங்களையும், சிரமங்களையும் பகிர்ந்துக்கொள்ளத் தயார் என கிளாரா முழங்கினார். சர்வதேச அரங்கில் பெண்களுக்கான அவர்களின் உரிமைகளுக்காக முதன் முதலில் குரல் கொடுத்தார். கிளாராவின் இத்தகைய பெரும் முயற்சி உலகின் பல்வேறு நாடுகளிலும் புரட்சி கர சோசலிசத் திறக்கான போராட்டத்தில் பண்களைப் பெரும் திரளான அணித்திரட்ட வழிவகுத்தது. கிளாரா தனது கணவர் ஜெட்கின் மரணத்திற்குப் பிறகு 1890 இல் ஜெர்மனிக்குத் திரும்பினார். சமூக ஜனநாயகக் கட்சியின் மகளிர் இயக்கத்திற்கு தலைமையற்றினார். கிளாரா தனது இடைவிடாத உழைப்பால் சர்வதேச மகளிர் இயக்கத்தில் தலைமை ஏற்கும் தகுதியைப் பெற்றார். 1907 இல் கோபன் ஹேகன் நகரில் நடைபெற்ற இரண்டாவது ஆங்கிலப் பேரயாம் வயத வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்கிற கோரிக்கையை வலியுறுத்தியது. சர்வதேச பெண்கள் தினமாக மார்ச் 8ம திகதியை அறிவிக்கவேண்டும் என்று கிளாரா அறிக்கை தயாரித்தார் இதனை தீர்மானமாக நிறைவேற்றியது அதன் அடிப்படையில் அமெரிக்க சோசலிச பெண்கள் இயக்க ஆர்ப்பாடடம் நடத்திய 1908 மார்ச் 8ம் நாள் ஆண்டு தோறும் சர்வதேச பெண்கள் தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. கிளாராவின் அர்ப்பணமிக்க பணிகள் விரிவானது சுவிட்சர்லாந்தில பேர்ன் நகரில் யுத்தத்திற்கு எதிராக சர்வதேச பெண்கள் மாநாட்டை நடத்துவதற்கு ரோசலக்ஷம் போர்க்குடன் இணைந்து செயல்பட்டார். இதற்காக கிளாரா மீது கெய்சர் அரசாங்க தேசத்துரோக குற்றம்சாட்டி சிறையில் அடைத்தது. சிறையிலிருந்த விடுதலை பெற்றதும் தீவிரமாக செயல்பட்டார். 1932 ஜுன் மாதம் 30ம் நாள் பாராளுமன்ற கூட்டத் தொடரில் துவக்க உரை நிகழ்த்த கிளாரா அழைக்கப்பட்டார். ஜென்மன் பாராளுமன்றத்திற்குள் தனது முதிர்ந்த வயதிலும் உரை நிகழ்த்த ஜெர்மனிக்கு பயணமானார்.

கிளாரா ஜெட்கின் 1933 ஜுன் மாதம் 30ம் மாதம் 30ம் திகதி மாஸ்கோ அருகில் மரணமடைந்தார். கிளாராவின் இறுதி ஊர்வலத்தில் ஆறுலட்சம் மக்கள் கலந்துகொண்டனர். கிளாராவின் உடலைத் தாங்கிய பேழையை ஸ்டாலின் உட்பட பொதுவுடமை அகிலத்தின் தலைமைக்குழு உறுப்பினர்கள் சுமந்து சென்றனர். மாமேதை லெனின் அடக்கம் செய்யப்பட்ட இடத்திற்கு அருகே கிளாரா ஜெட்கின் அடக்கம் செய்யப்பட்டார். உலகப் பெண்களின் போற்றுதலுக்குரியவர் கிளாரா ஜெட்கின்.



## தமிழ் ஹைகூ

- சு.முரளிதரன் -

கூடையைக் கனக்க
கனக்கச் சுமந்து சென்றார்கள்
உள்ளே இந்த தேசம்.

ஆயள் முழுவதும் அந்த
ஏழைக்காகவே வாழ்ந்திருந்தது
இதயம்.

மணமகளின் அங்குக்குறை
நிவர்த்தி செய்யப்பட்டு விட்டதே!
தங்கம்.

அடைபட்ட கைதிகளுக்கு
அவ்வப்போது மரண தண்டனை
தீக்குச்சிகள்.

பஸ் விபத்தில் மிஞ்சியது
ஓரயிர் மட்டும் தான்!
புத்தகம்.

ஆயிரத்துக்கு முயன்று நூறு
அதிகமாகக் கிடைத்து விட்டது
இப்போ இலக்கு இரண்டாயிரம்.

ஏய்! யாரங்கே ஆற்றில்
பாலைக் கொட்டி விட்டு ஓடிவிடுவது
நீர் வீழ்ச்சி.

சில்லறை விலையில்
சின்னச் சின்ன சவப்பெட்டிகள்
சிகரெட் பாக்கட்டுகள்.

தோலைச் சுவைத்து
கோலம் போட்டு வளர்ந்தது
தேமல்.

கோடி கோடி வார்த்தைகள்
நாவுமில்லை இதழ்களுமில்லை
உன்னிரண்டு கண்கள்!

## வந்தவள்...



ஒரு சாரல் நாளில்
வானவில்
பார்த்துக் கொண்டிருந்தோம்
மகளும் நானும்...

மகள் கேட்டாள்
'வானவில்லின் வண்ணங்களை
அப்படியே எடுத்து வந்து
விடலாமா?'

'அப்படி எடுத்து
வந்தவள் தான்
நீ' என்றேன்.

- ஸ்ரீரசா -

## கடமை

பள்ளிக்கூடம் திறந்தாச்சு
சீருடை
சப்பாத்து
புத்தகப்பை
இன்னும் பல....
சம்பளம்
சரிவர கிடைக்கவில்லை

மூன்றாம் வகுப்பில்
பயிலும் மகனின்
முகம் மீண்டும் மீண்டும்
வந்து மறைய
"முத்து"
இந்தச் சன்னலுக்குத்
துணி வாங்கணும்
காரை ஸ்டார்ட் பண்ணு!"

- கவிதைச் சிறகுகள் -
மலேசியா ஆ.குணநாதன்

## துளிப்பா

மனிதம் கொன்றார்கள்
மனிதனைக் கொன்றார்கள்
மனிதத்துவமா? மதத்துவமா?

இன்னொருநாள் வாழ்க்கைக்குக்
கூத்தாடுகிறான் கிழவன்
வாசலில் நாற்காலி.

பள்ளிமுதல் பல்கலைக்கழகம் வரை
பயணம் செய்வது
பணமே, பாடம் அல்ல

பத்து விரல் செய்யாததைப்
பதினொன்றாம் விரல்
செய்துவிடுமா?

- விழிகள் தி. நடராசா -

## குறிஞ்சித் தென்னவனின் குறும்பூக்கள்

கம்பிகளில் தொங்குகிறார் பெண்கள்!
கனிவோடு நோக்கும் பலர் கண்கள்!
எம்பும் எழில் இளசுகளுக்
கிரையாகும்! மும்மொழியில்
பெண்களுக்கும் உண்டாசனங்கள்!





சோதிலிங்கம் ஆபிஸில் சீ.சி.
துரைக்குமவர் நம்பிக்கை பீ.சி.
மாத முடிவில் இரவு
மணி பலவும் விழித்திருப்பார்
சோதிவிலாஸ் இன்றிவரின் ஆஸ்தி

விவசாய விஸ்தரிப்பு அலுவர்
விக்கிரம மக்கள் கைத் தழுவர்
தவணை கடன் விதைகிழங்கு
தாராணம்... எவருண்டு,
இவர் போல அரசின் அனுவர்

காலிமுகக் கடலினிலே அலைகள்
கரையோரம் வாலிபத்தின்
சோலி பல நெஞ்சலைந்து கலைகள்
சுற்றும் இள வட்டங்கள்
வேலியில்லா இங்குடல்கள் விலைகள்!

பஸ்ஸினிலே பார்சலொன்று கண்டார்!
பலர் எடுக்க நெஞ்சில பயம் கொண்டார்!
விஷ்ஷேஸ படைகள் வந்து
மீட்டார்கள் பார்ஸலதை
இஸ்ஸோ வடைகள் படை தின்றார்!

சாமந்தி பூப்போல் சமைந்தாள்!
சந்திரனை நெஞ்சில் சுமந்தாள்
பாமன்கடை பக்கம் தொழில்
பார்த்தான் ஜூலைத் தீயில்
ஆமாம்! சந்திரனும்... சமைந்தான்!

பத்து தினம் வந்தலைந்தார் பட்டர்!
பதிவாளரும் களைத்து விட்டார்!
பத்து பத்தை பக்குவமாய்
பரிமாற... பத்திரங்கள்,
இத்தனை நாள் வந்த பயன் பெற்றார்!

வணக்கம் கடவுளே!

(கலைமாமணி வி.கே.டி பாலன் என் மீசை முளைக்காத காலத்துச் சிநேகிதன்...... இன்றும் தான்....! தொலைபேசி உரையாடல்களின் போதும் தொடர்பாடல்களின் போதும் பேச்சை ஆரம்பிப்பது இப்படித்தான். எனக்குள்ளும் அந்த தாக்கம். அதனால் தான் இப்படித் தொடங்கினேன்.)

நீண்ட நாளைக்குப் பின்னர் கடிதம் எழுதுகிறேன் என்று நினைக்கிறாயா? நிம்மதிப் பெருமூச்சுவிட இப்போதுதானே காலம் கனிந்து இருக்கிறது.

மாற்றம்....! மாற்றம்....! மாற்றம்.....!
மாற்றம் வந்தால் நாடு செழிக்கும் வீடு தழைக்கும்.
மாற்றம் எனில் நன்மைகள் சேரும்.
மாற்றம் இல்லையெனில் நாடே நாறும்!

நல்லாட்சிக்கான வழி தெரியாது
விழி பிதுங்கி நின்றனர் நாட்டுப்
பற்றாளர்கள்.

கண்ணியத்திற்குரிய
மாதுலுவாவே சோபித தேரர்
கொள்கை முழக்கம் செய்தார்.
அதுதான் காவி உடையின்
அடையாள மச்சம்.
அது அவரது தைரியத்தின்
உச்சம்.


துணிந்து முடிவெடுத்தனர்
முன்னைய ஜனாதிபதி
சந்திரிகா விஜயகுமாரதுங்க
அம்மையாரும்,
இன்றைய ஜனாதிபதி
மைத்திரிபால சிறிசேன
எனும் விவசாயி மகனும்.

அரசபோகத்தை துறந்து
புத்தரின் அறவழியில்
அகிம்சை போராட்டத்திற்கு
ஜாதிக ஹெல உறுமயவும் குதித்தது.

பிரச்சார பீரங்கிகளாக அணிவகுத்து நின்றனர்
மக்கள் விடுதலை முன்னணியினர்.

சூழல் எதுவானாலும் சுயநலன்களைப் பாராது,
தங்கள் சுயரூபங்களைக் காட்ட மக்களும்
மௌனப் போராட்டம் மூலம் நீர் வார்த்தனர் – புரட்சி
யாகத்திற்கு நெய் சேர்த்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியும் கச்சை கட்டிக் கொண்டு
பச்சைக் கொடிகாட்டியது!
தமிழர் விடுதலைக் கூட்டணியும் வலது கரமானார்கள்,
விடிவுக்கு வரமானார்கள்
முஸ்லீம்களும் தங்கள் கலாசார அடையாளத்தை
காப்பாற்றிக் கொள்ள முடிவெடுத்தனர்
முஸ்லிம் கட்சிகளும் தலைமைகளும் தடுமாறின.
கெடுபிடிகளுக்கு மத்தியில் எடுபிடிகளாய் இருந்தவர்கள்
ஒருவாறு தங்களை சுதாரித்துக் கொண்டனர்.
சிறுகட்சி முன்னே வந்தது. பெருங்கட்சி பின்னால் வந்தது.



# கடவுளுக்கு ஒரு கடிதம்

பெருந்தோட்டதுறை தொழிலாளர் வர்க்கமும் தோள் கொடுக்கத் தணிந்தது. பாட்டன் வழித் தலைமையோ, நிபந்தனையற்ற ஆதரவு எனப் பணிந்தது. தாத்தா தனித்து விடப்பட,
தொழிற்சங்க பேரர்கள் சூரர்களானார்கள்,
மாற்றம் ஒன்றே ஏற்றம் என எண்ணி ஏறு நடைபோட்டார்கள்.

இப்படி நாடே திரண்டு எழுந்த நிலையிலும்
முரண்டு பிடித்து நின்றனர் 'பில்லா'க்களான முல்லாக்கள்.
தேர்தல் ஆணையாளரும் ஆறுதல் அளித்தார்
பாதுகாப்புத் தரப்பினரின் பங்களிப்பும் பவித்திரமானது.

ஜனவரி 08 ஆம் நாள்
அடிமைப்பட்ட நிலத்தில் வெடித்து முளைத்தது
விடுதலைத் துப்பாக்கி வாக்குச் சீட்டுகளாய்
அராஜகத்திற்கு முடிவு கட்டப்பட்டது.
விடிவு எட்டப்பட்டது.

தேர்தலில் தோற்ற போதும் அரசபோகத்தை துறக்க மறுத்து,
அராஜகத்தை கட்டவிழ்த்துவிட முஸ்தீபு.
நாடு செய்த புண்ணியத்தால்
திருப்பதி வெங்கடாஜலபதியும் கைவிட
மஹிந்த எக்ஸ்பிரஸ் மெல்ல நகர்ந்தது.

மக்கள் மாற்றம் கண்டனர்,
ஏற்றம் கொண்டனர்.
அன்னை நாட்டின் மக்கள் அடிமைகளாய்
சொந்த நாட்டிலேயே சொந்தங்கள் அகதிகளாய்
இருந்த நிலை மெல்ல மெல்ல மறைகிறது,
நாட்டில் நல்லாட்சி மலர்ந்தது.


ஒவ்வொருவர் இடத்திலும் புத்துணர்ச்சி. ஒவ்வொருவர் முகத்திலும் புத்தொளி. ஆனால் 60 நாட்களின் பின்னர் அதாவது இப்பொழுது மக்கள் முகங்களில் சோக ரேகைகளை சொந்தம் கொண்டாடுகின்றது.
நாடடைச் சுரண்டி நாசப்படுத்தியவர்களைக் கொண்டு சிறைச்சாலைச் சுவர்களுக்கு வெள்ளையடிக்கத் தயங்குவதேன்.?
இதுவே பாதிக்கப்பட்ட மக்களின் பகிரங்கக் வேள்வி.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டும் நீ மௌனமாய் இருப்பது ஏன்? எனக்குப் புரிகிறது.
சுரண்டல்காரர்களை, லஞ்ச லாவண்யத்தில் மூழ்கியவர்களை
போதைவஸ்துக்களால் சமூகத்தை சீரளித்தவர்களை,
எத்தனோல் இறக்குமதியாளர்களை,
பாலியல் கொடுமைகள் செய்தவர்களை,
பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டை, கடவுச்சீட்டு போன்றவைகளில் மோசடி புரிந்தவர்களை,
வெள்ளைவான் கடத்தல்காரர்களை,
சட்டம் நீதிக்கு சாவுமணி அடித்தவர்களை,
அரசு விட்டுவைத்தாலும், நீ விட்டுவைக்கமாட்டாய் என்பது எங்கள் நம்பிக்கை.

மீண்டும் அடுத்த கடிதத்தில் சந்திக்கிறேன்,
இப்படிக்கு
பக்தன்

பதிவுகள்

## "கொங்காணி" வெளியீட்டு விழாவில் கொழுந்து ஆசிரியர்



"இந்த மண்ணில் இலங்கை முற்போக்கு எழுத்தாளராக சங்கம் விதைத்த இலக்கியக் கோட்பாடுகளை உள்வாங்கி இலக்கியம் மூலமும் சமூக சேவை செய்யலாம் என்ற உந்தல் என் உள் மனதில் துளிர்விட்டதன் விளைவே என் சிறுகதைகள்"

தனது தமிழிலக்கியப் பிரவேசத்துக்கும், சிறுகதைப் புனைவுக்கும் - நெம்புகோலாக இருந்ததை மேற்கண்டவாறு நாடறிந்து இலக்கியவாதி ப.ஆப்டீன் வெளிப்படுத்துகிறார்.

இன ஒருத்துவத்தை, வற்புறுத்தும் இவரது சிறுகதை தொகுதி "கொங்காணி" 17.02.2015 ஆம்திகதி பம்பலப்பிட்டி ஏ.ஜி.எஸ். கலையரங்கில் வெளியிடப்பட்டது. சாகித்திய ரத்னா பேராசிரியர் சபா ஜெயராசா தலைமை தாங்கினார். அடுத்து கொழுந்து ஆசிரியர் அந்தனி ஜீவா நூலாசிரியரைப்பற்றி பேசும்பொழுது...

"மலையக இலக்கியத்தால் பேசப்படாத படைப்பாளி ஷகொங்காணி" சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர் ப.ஆப்டீன் ஆங்கில இலக்கிய ஆர்வம் உள்ளவர். ஆங்கிலச் சிறுகதைகளைப் படித்து மொழிபெயர்ப்புச் செய்யும்படி சொல்லியுள்ளேன். "கொங்காணி"த் தொகுப்புச் சிறுகதைகளைப் படித்த போது, அமரர். என்.எஸ்.எம்.ராமையாவின் "ஒரு கூடைக் கொழுந்து" சிறுகதைகளைப் படித்தது போல் இருந்து. அவரது சிறுகதைகளும் மனித நேயம், யதார்த்தம் என்பவற்றை வெளிப்படுத்துபவை. மிகநுட்பமாக எழுதுவார். அவர் எழுத்தில் சத்திய வேட்கை இருந்தது. கொழும்பில் இன்று வாழும் மலையகத்தவர்களும் எழுதுகின்றனர். ஆனால் என்.எஸ்.எம்.ராமையா கொழும்பு வந்தபின் மலையக வாழ்க்கை பற்றிச் சிறுகதை எழுதமாட்டேன் என்றார். இன்று மலையகம் அக்காலத்திலிருந்ததைப் போல இல்லை. மாறிவிட்டது. பேராசிரியர்கள், டாக்டர்கள், சட்டத்தரணிகள் இப்படிப் பல தரப்பட்டவர்கள் அங்கு வாழ்கின்றனர்.

இன்றைய தொடர்பு ஊடகங்களிலும் கணிசமான அளவில் ஊடகவியலாளர்கள் பணி செய்கின்றனர். பேராசிரியா நந்தி, ஆப்தீனை இலக்கியத் துறையில் ஊக்கப்படுத்தினார். இருவரும் சமகாலத்தில் நாவலப்பிட்டியில் வாழ்ந்தனர். அதுபோல் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவும் இவரது இலக்கிய வளர்ச்சியில் அக்கறை காட்டியுள்ளார். மல்லிகைப் பந்தல் ஊடாக ஆப்டீனின் "இரவின் ராகங்கள்" நூலை ஜீவா வெளியிட்டார். அநுராதபுரச் சூழலின் அவசியத்தை ஆப்டீன் புனைவிலக்கியமாக்கி உள்ளார். "நான் பயணித்த புகைவண்டி" இவரது மற்றொரு சிறுகதைத் தொகுதியாகும். மலையக எழுத்தாளர் தமக்கான பாதையைத் தாமே வெட்டிப் பயணித்தவர்களென்பதை நாம் மறந்து விடக் கூடாது. ப.ஆப்டீன் தொடர்ந்து சிறுகதைகள் படைக்க வேண்டும் என அந்தனி ஜீவா குறிப்பிட்டார்.

கலைஞர் கலைச்செல்வன் நூலாசிரியரை பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். நூலின் முதல் பிரதியை புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொண்டார். நூலாசிரியர் ப.ஆப்டீனின் நன்றியுரையுடன் வெளியீட்டுவிழா நிறைவுற்றது.

தகவல்: ம.பா.சி

❊❊❊❊❊❊❊❊❊❊❊❊❊

## காற்றைச் சலவை செய்

**- கவிஞாயிறு தாராபாரதி -**

சூரியக் கோளம் அழுக்கானால் - அதைச்
சுத்தப் படுத்தும் உன்வியர்வை!
தூரக் கிழக்கு வான்பரப்பில் - படியும்
தூசியைத் துடைக்கும் உன்கைகள்!

நிலவின் கறைகள் துடைக்கப்போ - அங்கு
நிழ்ல்தரும் மரங்கள் வளர்க்கப்போ
உலகத் தரையைக் கழுவிவிடு - முதலில்
உனது நகத்தின் அழுக்கையெடு!

நாளும் கழிவுகளால் நாறி - அழுக்கில்
நீளும் நதிகளைக் குளிப்பாட்டு -
கோளும் விண்மீன் தொகுதிகளும் - உன்
தோளை வலம்வர வழிகாட்டு!

நல்ல காற்று மண்டலமும் - தினம்
நச்சுத் தன்மை படிகிறதே!
உள்ளெழும் மூச்சுக் காற்றாலே - நீ
உலவும் காற்றைச் சலவைசெய்

சுற்றுச் சூழலைக் கட்டுப்படுத்த - உன்
மக்கள் தொகையை மட்டுப்படுத்து!
சுற்றம் தழுவு; சுற்றத் தோடு - நிதம்
சுற்றுச் சூழல் 'சுத்தம் தழுவு!'

### தேயிலைத் தோட்டத்திலே ...
### நூலிலிருந்து சில வரிகள்

**- சி.வி -**

கட்டி வதைக்கினும்
சுதந்திரத் தீச்சுடர்
கனவின் எழுச்சியை
அழிக்கவும், போமோ?
ஆப்பினைச் சம்மட்டி
அறைய எழுந்த
ஆப்பின் அறைக்கும்
அடங்குவதாமோ?
தோப்பின் மரங்களைப்
பிளந்திடும் போது
தெரிக்கும் தீப்பொறி
தொடராது போமா?
மூச்சிலே சுதந்திர
திருக்கலந்திடுமோ
மூச்சிலே விடுதலைச்
சுகம் மலர்ந்திடுமோ?

# முத்தலைகள் இணைந்தால் முத்து மழை பெய்யாதோ





நாட்டில் ஏற்பட்ட மாற்றத்திற்கேற்ப மலையகத்திலும் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அன்பு இராஜ்யத்தில் (மைத்திரி பாலனய) மலையக மண்ணின் மைந்தர்கள் மூவர் அமைச்சர்களாகப் பதவியேற்றுள்ளனர். பெருந்தோட்டத் துறை தொழிலாள வர்க்கத்தைச் சார்ந்தவர்கள் தொழிற்சங்கத் தலைவர்களாக வரவேண்டும் என்பது மட்டும் அல்ல. ஆட்சிக் கட்டிலில் அமைச்சர்களாகவும் இருக்க வேண்டும் என்பது பலரது அபிலாசையாகும்.

அந்த வகையில் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சேனநாயகாவின் அரசாங்கத்தில் கல்வி இராஜாங்க அமைச்சராக மலையக மக்கள் முன்னணியின் அரசியல் பிரிவுத் தலைவர் வேலுப்பிள்ளை. இராதாகிருஷ்ணன். தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராக தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர். பழனி திகாம்பரம் பெருந்தோட்டத் தொழிற்துறை இராஜாங்க அமைச்சராக , ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவரும். தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் முன்னாள் செயலாளருமான கருப்பையா வேலாயுதம் ஆகியோர் பதவியேற்றுள்ளனர்.

இம்முத்தலைகளும் இணைந்ததால் மலைமுகடுகளில் முத்துமழை பெய்யும் நாள் வெகுதொலைவில் இல்லை.

இவர்களை தமிழ்க் கலைஞர் அபிவிருத்தி நிலையத்தின் சார்பில் பாராட்டி கௌரவிக்க முடிவு செய்தனர். இவர்களிடத்தில் இருந்து கலாநிலையம் எந்தவிதமான தேவையையோ லாபத்தையோ எதிர்பார்க்கவில்லை. மாறாக சமூகநலன்கருதியே இவ்விழாவை எடுக்க நேர்ந்தது. இதுவரை காலமும் அமைச்சர்களாக இருந்தவர்கள் மலையக மக்களுக்காக. மக்களின் நலனுக்காக செய்த சேவையைவிட மேலும் கூடுதலான சேவை செய்ய வேண்டும். இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக இருண்ட லயன் காம்பராக்களில் தங்கள் வாழ்க்கையை முடக்கிக் கொண்டும் முடங்கிக் கொண்டும் வாழும் மக்களின் வாழ்வின் வசந்தம் எற்படவேண்டும் என்ற ஆதங்கம் தான் இவ்விழாவுக்கான அடிப்படை.

நாங்கள் எந்தவொரு நல்ல காரியத்தை செய்கின்ற போதும் எங்களுக்காக உதவுவதற்கு எப்போதும் தயாராக இருப்பவர்கள் மூவர். அந்தத் துணிவோடுதான் எந்த ஒரு விசயத்திலும் எங்களால் தைரியமாகத் தடம் பதிக்க முடிகிறது. அவர்களை கொழுந்தில் பதிவு செய்வதை ஒரு நன்றிக் கடனாகக் கருதுகிறோம்.

புரவலர் புத்தகப் பூங்காவின் நிறுவனர். தமிழ்த் தொண்டாளர். புரவலர் ஹாசிம் உமர் கொடைவள்ளல். தேசமான்ய அப்துல் கையூம் ஜே.பி. சமூகசேவகி பொன்மனச் செல்வி கௌசலாதேவி கோவிந்தபிள்ளை ஆகிய மூவருமே எந்நேரத்திலும் எமக்குக் கைகொடுப்பவர்கள். இவர்கள் என்றும் எங்கள் நன்றிக்குரியவர்கள். இவர்களை கொழுந்து வாழ்த்தி மகிழ்கிறது.


**We wish to Our Ministers All Success.**


# SASICO TEX

**Wholesale & Retail Dealers in Textiles**

**Authorised Distributors for Original KIBS Products**

Lucky Paradise Super Market,
No. 53/A 12, Keyzer Street, Colombo 11, Sri Lanka.
Tel: +94 112 432 850, Fax: +94 112 471719 Mobile: +94 777 769 037

# எமக்கு தேர்தல் அவசியமில்லை... மக்கள் தேர்தலை எதிர்பார்க்கவுமில்லை!



தற்போது எமக்கு தேர்தலொன்று அவசியமில்லை, ஜனாதிபதி முறைமை மற்றும் தேர்தல் முறைமைகளில் மாற்றம் ஏற்படுத்தியதன் பின்பே பாராளுமன்ற தேர்தலுக்கு செல்லவேண்டும் எந்த நோக்கோடு எந்த மாற்றத்தோடு சர்வாதிகார ஆட்சிக்கு சவக்குழியை அமைக்க, ஜனநாயக சந்நிதியை உருவாக்க நினைத்தோமோ அதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

என நீதியான சமூகத்திற்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் மாதுலுவாவே சோபித தேரர் கோரிக்கை விடுத்தார்.

அத்தோடு இந்த ஆட்சி மாற்றத்தின் பிரதானமானவர்கள் தமிழ், முஸ்லிம் சமூகத்தவர்களாவர். எனவே சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது அவசியமாகும். தற்போது எமக்கு சுதந்திரம் கிடைத்தது போன்ற சூழல் ஏற்பட்டுள்ளது.

அதனை நாட்டின் எழுத்தாளர்களே பாதுகாக்க வேண்டும் எனவும் அவர் வேண்டினார். ஜனநாயகத்திற்கான எழுத்தாளர்கள் எனும் அமைப்பினர் ஏற்பாடு செய்த கருத்தரங்கு அண்மையில் கொழும்பு நூதனசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தலைமை வகித்து மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் நாட்டில் பல்வேறு கஷ்டங்களுக்க மத்தியில் மக்கள் வாழ்ந்து வந்தனர். சுதந்திரமாக செயற்பட முடியாத சூழல் காணப்பட்டது. ஊடகவியலாளர்கள் எழுத்தாளர்கள் தமது தொழிலை சுதந்திரமாக முன்னெடுக்க முடியாத நிலைமை இருந்தது. அத்தோடு ஜனநாயகம் குழிதோண்டி புதைக்கப்பட்டிருந்தது. நீதித் துறை விபசாரமாக மாறியிருந்தது. ஊழல் மோசடிகள் நாட்டை நிர்வகித்தன. இந்நிலையில் நீதியான சமூகத்தை விரும்பக் கூடியவர்கள் இதற்கு எதிராக போராடினர். குறித்த போராட்டத்திற்கு ஜனவரி 8ம் திகதி வெற்றிகிடைத்தது மேற்படி தற்போது நாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

எனவே இந்த மாற்றத்தை பாதுகாக்க வேண்டியுள்ளது. நாம் கொண்டு வந்தது மஹிந்தவிற்கு பதிலாக மைத்திரியும், டி.எம்.ஜயரத்னவிற்கு பதிலாக ரணிலையும் கொண்டு வரும் மாற்றம் அல்ல. இது நல்லாட்சிக்கான மாற்றமாகும். தற்போது கிடைத்திருக்கும் மாற்றத்தினை கொண்டு நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தாவிடின் நாம் தோல்வி அடைந்து விடுவோம். எனவே எமது பிரதான நோக்கம் நிலைநாட்டப்பட வேண்டும். ஜனாதிபதி முறைமையில் கட்டாயம் மாற்றம் ஏற்படுத்த வேண்டும். அதுவே எமது முதன்மை இலக்காகும், நிறைவேற்று அதிகாரம் என்பது நாட்டின் நீதி, நிர்வாகம், நீதிமன்றம், தேர்தல் ஆகிய அனைத்து துறை அதிகாரத்தையும் தன்னகத்தே கொண்டிருந்த சர்வாதிகார முறைமையாகும்.

எனவே நாட்டின் பாராளுமன்றிற்கு பொறுப்பு கூறக்கூடிய முறைமையை ஏற்படுத்த வேண்டியுள்ளது. ஆகவே 100நாள் வேலைத்திட்டத்தை அமுல்படுத்த எழுத்தாளர்கள் ஒன்றிணைய வேண்டியுள்ளது.

தற்போது ஏப்ரலில் பொதுத்தேர்தல் நடத்தவேண்டும் என்று பரவலாக பேசப்படுகிறது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் 100 நாள் வேலைத்திட்ட நாட்குறிப்பின்படி தேர்தல் நடத்தியே தீருவோம் என்று இவர்கள் அடம்பிடிக்கின்றனர்.


எமக்கு தேர்தல் அவசியமில்லை. நாட்டு மக்கள் தேர்தலை எதிர் பார்க்கவுமில்லை. நாட்டில் ஜனாதிபதி முறைமை, தேர்தல் முறைமை ஆகியவற்றில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் அத்தோடு கட்சிதாவும் முறைமைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். மேலும் அரசியலமைப்பின் 17வது திருத்த சட்டத்தை கொண்டு சுயாதீன ஆணைக் குழுக்களை நியமிக்க வேண்டும். இதனை நிலை நாட்டினால் நாட்டில் நல்லாட்சி இலகுவாக ஏற்படும். இவற்றை நிலைநாட்டியதன் பிற்பாடே பாராளுமன்ற தேர்தலை நடத்த வேண்டும்.

மாற்றம் என்ற அடித்தளத்தில் ஒரு நல்லாட்சியைக்கான அந்த நல்லாட்சியில் ஜனநாயகம் பேணிப் பாதுகாக்க இன்று தமிழ் முஸ்லிம் மக்களும், ஏறத்தாள எல்லாக்கட்சிகளும், தமிழ்க் கூட்டமைப்பும் முஸ்லிம் கட்சிகளும் ஏன் மக்கள் விடுதலை முன்னனியும், ஆளுங்கட்சி எதிர்க்கட்சி இணைந்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் இன்றைய அரசாங்கத்துக்கு இருக்கிறது. இந்நிலையில் தேர்தலை சற்று தள்ளி வைத்ததாவது எந்த நோக்கோடு எந்த மாற்றத்தோடு சர்வாதிகார ஆட்சிக்கு சவக்குழி அமைக்க ஜனநாயக சந்நிதியை உருவாக்க நினைத்தோமோ அதை நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மக்கள் ஆட்சியை நிலை நிறுத்தாது ஒரு தேர்தலை நாடு சந்திக்க நேர்ந்தால் நிறைவேற்று அதிகாரம் உள்ள கொடுங்கோல் ஆட்சிக்கு முடிவுகட்ட முடியாமலே போகும் எனக் கூறி தமது தலைமை உரையை நிறைவு செய்தார்.

- கலாரிஷி -

கண்ணியத்திற்குரிய
மாதுலுவாவே சோபித தேரர்
அவர்களே
உங்களை மதிக்கிறோம்
உங்கள் சிந்தனைகளைத்
துதிக்கிறோம்
கொழுந்து உங்களை வாழ்த்தி மகிழ்கின்றது

# எஸ்.பொ. என்ற ஆளுமை



எஸ்.பொ. என்று அழைக்கப்படும் எஸ்.பொன்னுத்துரை தமிழிலக்கியத்தின் மிகப்பெரிய ஆளுமை. அவருக்கு அஞ்சலிக் கூட்டம் நடத்துவது தமிழினத்தின் கடமையாகும். தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை எனப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூறியுள்ளார். அது எஸ்.பொ.வுக்கும் பொருந்தும்.

அவருக்கு நிகரான தமிழலக்கியவாதி இன்றுண்டா?

நட்பு ரீதியில் அவரோடு புழங்கி உள்ளேன். அவரது படைப்புகளைப் படித்திருக்கிறேன். எஸ்பொ.வின் தூண்டுதலால் கவிஞர் மஹாகவி 'கண்மணியாள் காதை' யைப் படைத்தார். நடிகவேள் லடீஸ் வீரமணியை வில்லிசைத்து பாட வைத்தனர். தானொரு பெருங் கலைஞன் என்ற திமிர் வீரமணிக்கு இருந்தது. அதைக் கண்டு முற்போக்குச் சிந்தனையாளர் அ.ந.கந்தசாமியே பயப்பட்டதுண்டு! அதன் பின்னர் வீரமணிக்கு அறிவுரை வழங்கி அவரது முன்னேற்றத்திற்கு காரணமானார்.

கண்மணியாள் காதையை ஐரோப்பாவுக்கும் கொண்டு சென்று விரமணி வில்லிசைத்து ஐரோப்பிய நாடுகளில் தமிழ் மக்களின் பாராட்டையும் பெற்றார். அந்த கால கட்டத்தில் எஸ்.பொ. வும். அ.ந.கந்தசாமியும் ஒட்டிப் பிறவா இரட்டையராக அந்நியோன்யமாக இருந்தனர். இதை அக்காலத்தில் முற்போக்கு எழுத்தாளர் சுபைர் இளங்கீரன் நடத்திய 'மரகதம்' என்ற மாத இதழில் அதன் 'ஒட்டிப்பிறவா இரட்டையர்' என்ற பத்தியில் அறிமுகப்படுத்தியது.


எஸ்.பொ.வின் மூத்த மகன் டாக்டர் அநுரா சென்னையில் 'மித்ர' பதிப்பகத்தை ஏற்படுத்தினார். எஸ்பொ.வின் 60 ஆவது பொன்விழா பிறந்த நாளைக் கொண்டாடி அவரது 5 நூல்களையும் சென்னையில் வெளியிட்டனர். இதன் பின்னணியில் ஈழத்து நாடகக் கலைஞர் கலைமாமணி வீ.கே.டி.பாலனும் இருந்தார். இவ்விழாவில் எஸ்பொ. சிறுகதைகள் 52 தொகுக்கப்பட்டு நூலாக்கப்பட்டுள்ளன. 'எஸ்.பொ. பார்வை' என்ற நூலையும் தமிழகத்தில் வெளியிட்டார்.

கவிஞர் நீலாவணனின் நட்பின் இழப்பைப் பற்றி எஸ்பொ. கவலைப்பட்டதுண்டு. அவரது ஒவ்வொரு எழுத்தும் அச்சுப் போல் அற்புதமாக இருக்கும். நீலாவணனின் நினைவுகளை எழுதி ஆவணப்படுத்தியுள்ளார். பாரதிதாசன் கவிதைகளோடு நீலாவணன் கவிதைகளை ஒப்பிட்டுள்ளார். தமிழ்ப்பரப்பில் எஸ்.பொ. ஜாம்பவானாக இருந்தார். புதிய எழுத்தாளரைக் கண்டு பிடித்து எழுதத் தூண்டினார். 'கொண்டோடி சுப்பர்' என்ற புனைப்பெயரில் சுவையான விடயங்களை எழுதினார். புதிய, புதிய சொற்களையும் உருவாக்கியுள்ளார். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் அவருக்கு தேர்ச்சி உண்டு.

(கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்திய எஸ்.பொ வின் அஞ்சலி கூட்டத்தில் அந்தனி ஜீவா நிகழ்த்திய உரையின் சில பகுதிகள்)




# கொழுந்து நூலகம்




நூல் தலைப்பு: யாழ்கதைகள்
வகை: இளையோருக்கான சிறுகதைகள்
நூலாசிரியர்: பிரமிள்
தொகுப்பு: சித்தி அமரசிங்கம்
முதற்பதிப்பு : 2009
வெளியீடு: லயம்,
155, கிழக்கு வீதி, நேருநகர், சத்தியமங்கலம், 638402
விலை: ரூபா. 45/- (இந்தியப் பணம்.)




நூல் தலைப்பு: கலைஞர் கலைச்செல்வனின்
குறுநாடகங்கள்
வகை: நாடகங்கள்
நூலாசிரியர்: கலைஞர் கலைச்செல்வன்
முதற்பதிப்பு: 2014
வெளியீடு: இலக்கிய முற்றம்,
E.G.2, தேசிய வீடமைப்புத் திட்டம், கொழும்பு-02.
விலை: ரூபா. 350/-





நூல் தலைப்பு: கொங்காணி
வகை: சிறுகதைகள்
நூலாசிரியர்: ப. ஆப்டீன்
வெளியீடு: கொடகே சகோதரர்கள் பிரைவேட் லிமிட்டெட்
661, 663, 675, பி.டி.எஸ். குலரத்ன மாவத்தை,
கொழும்பு-10.
விலை: ரூபா. 450/-




நூல் தலைப்பு: காக்கைச் சிறகினிலே
வகை: இலக்கிய மாத இதழ்
நூலாசிரியர்: பி. முத்தையா
முகவரி: 288, டாக்டர் நடேசன் சாலை, திருவல்லிக்கேணி,
சென்னை-600005
விலை: ரூபா. 25/- (இந்தியப் பணம்.)




நூல் தலைப்பு: கல்வெட்டு பேசுகிறது
வகை: சிறுசஞ்சிகை
நூலாசிரியர்: சொர்ணபாலன்
முகவரி: 924A, 29வது வீதி, பக்தவச்சலம் நகர், வியாசர்பாடி,
சென்னை-600039
விலை: ரூபா. 20/- (இந்தியப் பணம்.)






நூல் தலைப்பு: ஸி.வி.வேலுப்பிள்ளை
வகை: 100 பிறந்ததின மலர்
நூலாசிரியர்: -
முகவரி: ஸி.வி.வேலுப்பிள்ளை நூற்றாண்டு நினைவுக் குழு,
ஹட்டன்.

# சிறுகதை மன்னன் புதுமைப்பித்தனின் கடைசிக் கடிதம்

இராஜ அரியரத்தினம்:



எனது அருமை நண்பர்,

கடந்த இரண்டு வருடங்களாக எனக்குப் பொல்லாத காலம். இப்போது... நோய் என்னைப் படுக்கையிற் போட்டு விட்டது. துரதிருஷ்டமான இந்த நோய் உடல் நிலை தளர்ந்திருந்த காலத்தில் என்னைப் பீடித்துக் கொண்டது. நான் அப்போது பாகவதரின் படத்துக்காகப் பூனா சென்றிருந்தேன். இப்போது எனது பண நிலை மகாமோசமாகிவிட்டது. நான் நோயினின்று குணமடைவதற்காக யாழ்ப்பாணத்து எழுத்தாளர்களும் வாசகர்களும் எனக்குப் பண உதவி செய்ய முடியுமா? இதைப் பற்றிச் சிந்தித்து, உடனே பதில் எழுதுக. அத்துடன் தயவுசெய்து ஈழகேசரியை இனி எனது புதிய விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.

தங்கள் நன்றியுள்ள : ஸி.விருத்தாசலம்

**இராஜ அரியரத்தினம் பற்றி....**

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த ஈழகேசரியின் ஆசிரியராக இருந்தவர். புதுமைப்பித்தனோடு நேர்முக அறிமுகம் பெற்று அவரது நண்பராக விளங்கியவர். புதுமைப்பித்தனின் மறைவைத் தொடர்ந்து ஃஈழகேசர்; (ஞாயிறு 11.7.1948) இதழில் ஃவித்தகன் புதுமைப்பித்தன்; என்ற நினைவுக்கட்டுரையை எழுதியிருக்கிறார். இதில் புதுமைப்பித்தனிடமிருந்து தனக்கு வந்த ஆங்கிலக்கடிதத்தைத் தமிழாக்கி வழங்கியுள்ளார். இக்கட்டுரைப் படியைக் கொடுத்துதவியவர் தொ.மு.சி. ரகுநாதன். புதுமைப்பித்தனின் கடைசிக் கடிதமாக இதுவே இருக்கலாம்.


வாங்கத் தவறாதீர்கள்

# வெற்றிக்கு வழிகாட்டி


தரம் 1 மாணவர்களுக்கு - பகுதி 1 பகுதி 2
24 மாதிரி வினாத்தாள் விடைகளுடன் அடங்கியது.

ஆக்கம் : பூ. பரமதயாளன்
B.A.PGDE, Pri. Trd. Dip.in. Psychology
வீரமுனை ராமகிருஷ்ண வித்தியாலயம் - சம்மாந்துறை அம்பாறை மாவட்டம்.

வெளியீடு: யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்
இல, 10-1/5, (Trust Complex) முதலாம் மாடி,
ஜிந்துப்பிட்டிய வீதி, கொழும்பு 13.
தொ.பே: 077 6258778

எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

# ஒரு தாயின் கனவு



- சந்திரகாந்தா முருகானந்தம் -

ஒரு புறத்தில் பாறைக் கற்களின் மேல் துணிகளைத் துவைத்துக் கொண்டிருந்த ராமாயி, சலசலத் தோடும் நீரில் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்த மகள் சித்தி ராவைப் பார்த்துப் பூரித்தாள். என்னமாய் தளதள என்று வளர்ந்து விட்டாள்! மகிழ்வான நினைப்பே மறுபடியும் மனதைக் கலங்க வைத்திட நெடுமூச்செறிந்தாள். "காதில கழுத்தில நகையில்ல கையிலையும் பணமில்ல ஒருத்தன்ட கையில கட்டிக்கொடுக்கிற வரையில மடியில நெருப்பைக் கட்டிக்கிட்டிருக்கணுமே!"

பீலியில் வடிந்த தண்ணீர் சலசலத்து ஓடிக்கொண்டிருந்தது. அம்மாவையும் அக்காவையும் பொருட்படுத்தாத முரளி, ஓடும் நீரில் பள்ளமான பகுதியில் குளித்துக்கொண்டிருந்தான். அவனோடு சேர்ந்து நண்பர்களும் கும்மாளமடித்து குளித்துக் கொண்டிருப்பதைப் பார்த்த ராமாயி மகனை எண்ணி மகிழ்ந்தாள். அவன் நன்றாகப் படிப்பதாகவும், இந்த வருடம் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் இந்தப் பாடசாலையிலிருந்து முதன்முதலாக சித்தியடையும் மாணவனாக இருப்பான் என்றும் போன வாரம் கணக்கு வாத்தியார் சொன்னதிலிருந்து, முரளியை எப்பாடு பட்டாவது அடுத்த வருடம் நகரப்புற பாடசாலைக்கு அனுப்பி படிப்பிக்க வேண்டும் என்ற எண்ணம் துளிர்விட்டிருந்தது. தோட்டப் பாடசாலையில் ஐந்தாம் ஆண்டுக்கு மேல் இல்லை என்பதால் மலையிறங்கிப் பிரதான வீதியில் பஸ் எடுத்துத்தான் பாடசாலைக்குப் போக வேண்டும்.

கணவனை நினைக்கும் போது அவளுக்கு எரிச்சல் எரிச்சலாக வரும். குடிப்பழக்கத்திற்கு அடிமையாகிவிட்ட அவன், தான் உழைப்பதைக் குடியிலேயே கரைத்து விடுவதுடன், அவளது உழைப்பிலும் கைவைப்பான். ராமாயி மிகுந்த சிரமத்தின் மத்தியில் தான் குடும்பச் செலவைக் கவனித்து வந்தாள்.

கடந்த வாரம் அவர்களது லயத்துக்கு வந்திருந்த வேலுசாமி, காளிமுத்துவுக்கு ஆசை காட்டியதை நினைத்த போது ராமாயிக்கு கோபம் ஒரு புறம் கவலை மறுபுறமாகவும் இருந்தது. வேலுசாமி, தோட்டத்திலுள்ள வளர்ந்த சிறுவர்களும், சிறுமிகள். ஓய்வு பெற்றவர்கள் என்போரை கொழும்புக்கு வேலைக்கு அனுப்பும் ஏஜென்டாக செயற்படுபவன். அதன் மூலம் அவனுக்கு நல்ல வருமானம் கிடைத்து வந்தது. கொழும்பில் வேலை கொள்வோரிடம் புரோக்கர் கட்டணமாக வசூலித்து விடுவதுடன், இங்கே அனுப்புபவர்களிடமும் கறந்து விடுவான். எனினும் மிக அவசரமாக வேலைக்கு ஆள் தேவைப்படும் போது இவர்களுக்கும் சிறிது முற்பணம் கொடுத்து ஆசை காட்டுவான்.

"என்ன காளியண்ணே, மகனைக் கொழும்புக்கு வேலைக்கு அனுப்பலாமே? சாப்பாட்டுக்கடை சில்லறைக்கடை, புடவைக்கடை ஏதோ விரும்பினதில சேர்த்து விடலாம். மாசாமாசம் சுளையா சம்பளம் கொடுப்பாங்க"

வேலுசாமி ஆசை காட்டவே, ராமாயி குறுக்கிட்டாள். "மகன் படிக்கணும்... நல்லாகப் படிக்கிறான்னு வாத்தியார் சொன்னாரு..."

காளிமுத்துவின் மனதில் ஆசை தொட்டுவிட்டதால் அவன் மனைவியின் கூற்றை மறுத்துரைத்தான். "படிச்சு இவன் என்னத்தைக் கிழிக்கப் போறான்? என்ன கவுண்மேந்து வேலையா கொடுக்கப் போறாங்க? வளர்ந்த பிறகு தேயிலை மலையில கவ்வாத்து வெட்ட வேண்டியது தானே? அதைவிட இப்பவே கொழும்பு, கண்டிக்குப் போய் கடையில வேலை செய்து முன்னுக்கு வரலாமே..."

"ஆமா.... அதானே? என்ன ராமாயியக்கா, அண்ணன் சொல்லுறதும் சரிதானே?" வேலுசாமி ஆசை காட்டினான். "மகன் கடை வேலைக்குப் போயிட்டா மூணு வேளையும் அடுப்பு எரியும்.... மகளோட காது மூக்கிலயும் நகை போடலாம்" வேலுசாமி ஆசை காட்டினான்.

"படிக்கிற பிள்ளையை குழப்பாத வேலுசாமி.... மேல படிச்சு நல்லா வருவான்னு வாத்தியார் சொன்னாரு"

"ராமாயி, இது நடக்கிற காரியமா?.... நடக்கப்போறதைப் பற்றி பேசு.. நம்ம தோட்டத்தில் யாரு படிச்சாங்க....?"

"இப்படியே சொல்லிகிட்டிருங்க... மத்த தோட்டங்களிலயிருந்து பொடி பொட்டைங்கெல்லாம் டவுனுக்குப் போயி பெரிய படிப்பெல்லாம் படிக்குதுங்க.... டெவன் தோட்டத்துல இருக்கிற என்ட அண்ணன் மவ. படிச்சு ரீச்சராயிட்டா.. பிள்ளைங்களுக்குப் படிச்சு கொடுக்கிறா"

வேலுசாமிக்கு ஏமாற்றமாய்ப் போய்விட்டது. காளிமுத்துவுக்கும் தான். எனினும் மனைவியை எதிர்த்துப் பேசமுடியவில்லை. குடித்து வெறியேறிய நேரத்தில் தான் அவன் அட்டகாசம் பண்ணுவான். மற்ற நேரங்களில் அவன் பெட்டிப் பாம்பு! அவள் கை தான் ஓங்கியிருக்கும்.

வேலுசாமி ஏமாற்றத்துடன் எழுந்த செல்வதைப் பார்த்து ராமாயி ஒரு மெல்லிய சிரிப்புடன் லயத்துள் நுழைந்தாள். காளிமுத்துவின் முகம் அணிலேற விட்ட நாய் போலானது.

இன்று ஞாயிற்றுக்கிழமை வேலுசாமி மறுபடியும் வரக்கூடும். வெறுங்கையுடன் இல்லாமல் போத்தலோடு வந்து காளிமுத்துவுக்கு ஊற்றிக் கொடுத்து காரியம் சாதிக்கப் பார்ப்பான். என்ன பாடுபட்டாவது மகனின் படிப்பை நிறுத்தி அனுபுறத தடுத்திடனும். எனதிடசங்கற்பம் பூண்டாள் ராமாயி.

கொழும்புக்கு அவனை வேலைக்கு அனுப்புவது பற்றி கதை அடிபடுவதை முரளியும் அறிவான். கொழும்பு என்றதும் அவன் மனதிலும் கற்பனைகள் இருந்தது தான். அம்மாவிடம் சாடைமாடையாகக் கேட்ட போது அம்மா பக்குவமாக எடுத்துச் சொன்னாள். "டே முரளி... கொழும்பு ஆசையை விட்டுத்தள்ளிடு... நீ படிக்கணும்... படிச்சு நல்ல நிலைக்கு வருவே.. அப்பாவோட பேச்சில எடுபட்டு படிப்பைக் குழப்பியிடாத"

அம்மாவின் வழிநடத்தல் ஒரு புறம், ஆசிரியரின் கற்பித்தலும் அதன் பெறுபேறாக பாடங்களில் ஏற்பட்டுவரும் ஆர்வம் மறுபுறமும், அவனது கொழும்பு ஆசையை முடிவுக்குக் கொண்டு வந்தது. இப்போதெல்லாம் அவனுக்கும் படிப்பில் தான் ஆர்வம். இதனால் ராமாயிக்கு ஆறுதலாக இருந்தது.

பீலிக்கரையில் வேலைகளை முடித்த பின்னர் குளித்து விட்டு, கழுவிய துணிகளையும் பாத்திரங்களையும் சுமந்தபடி

ராமாயியும், சித்திராவும் முன் செல்ல முரளி பின் தொடர்ந்தான்.

முரளியை மாத்திரமல்ல, சித்திராவையும் கூட கொழும்புக்கு வீட்டுவேலைக்கு அனுப்பிவைத்திட காளிமுத்துவுக்கு விருப்பம் தான். வேலுசாமியும் படாத பாடுபட்டு களைத்துப்போனான். "வயசுப் பெண்ணுகளை கண்காணாத இடத்தில வேலைக்கு அனுப்பிட்டு தினமும் பயந்தபடி இருக்கணும்... வேண்டாங்க... நாட்டில நடக்கிறதைப் பார்க்கிறப்போ எப்படிங்க பெண் பிள்ளைகளை வேலைக்கு அனுப்புறதுங்க? வயது வந்ததும் தோட்டத்தில பெயர் பதிஞ்சு கொழுந்து பறிக்கட்டுமுங்க நாம் இரண்டு பேரும் உழைக்கிறத வெச்சு சீவிக்கலாம்... நீங்க குடியை முதல்ல நிற்பாட்டுங்க.. சிறப்பாக வாழலாம்.. உடம்பையும் கெடுத்துக்கிறீங்க..." ராமாயி எடுத்துச் சொல்வதை நல்ல நிலையில இருக்கும் போது செவி மடுத்தாலும் மாலையில நிறை வெறியில் வருவது காளிமுத்துவின் வழக்கம். ராமாயி எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவன் கேட்பதாயில்லை.

ஞாயிற்றுக்கிழமையானாலும் தமது சொந்த வேலைகளால் தொழிலாளர்களுக்கு ஓய்வு கிடைப்பதில்லை. மாலையில் விறகுக்காக கொள்ளி பொறுக்குவதற்கு சித்திராவும், முரளியும் போயிருந்தார்கள். அவர்கள் திரும்பி வந்து கொள்ளிக் கட்டைகளை ஒத்தாப்பில் போட்டு விட்டு நிமிர்ந்த போது வேலுசாமிதான் கண்ணில் பட்டான். "தொலைஞ்சு போவான்.... போத்திலோட வந்திருக்கிறான்... அப்பன் என்ன சொன்னாலும் நீ கொழும்புக்கு போக சம்மதிக்காத.." என்று மெல்லிய குரலில் சொன்ன, சித்திராவைத் தொடர்ந்து லயத்துள் நுழைந்த முரளி கோடிப்புறம் சென்று முகம் கைகால்களைக் கழுவிக்கொண்டு வந்து படிக்க ஆரம்பித்தான். காளிமுத்துவும் வேலுசாமியும் குடித்துக்கொண்டிருந்தனர்.

வேலுசாமி தன் காரியத்தில் கண்ணாக இருந்தான். காளிமுத்துவுக்கு நிறைய ஊற்றிக் கொடுத்த படி கேட்ட போது, "சரி நாளைக்கே அனுப்பி வைக்கிறேன்.. கூட்டிக் கொண்டு போயிடு.." என்றான. இதைக் கேட்ட ராமாயி வெகுண்டெழுந்தாள். வேலுசாமியை ஏசி அனுப்பிவிட்டு கணவனையும் திட்டினாள்.

எல்லாவற்றையும் பார்த்து மிரண்டு போயிருந்த மகனிடம் வந்து அவனை ஆதரவாக அணைத்தாள் "நீ படி ராசா.. ஒண்டுக்கும் யோசிக்காத... அம்மா இருக்கிறன். கை விளக்கைக் கொழுத்தி வைச்சு அந்த மூலையில இருந்து படி..." என குரல் தளதளக்கக் கூறினாள். அம்மாவின் உற்சாகமூட்டலில் தொடர்ந்து படிப்பில் அக்கறை செலுத்திய முரளிக்கு வாத்தியாரும் கைகொடுத்தார். பலவித இடர்களுக்கும் மத்தியில் கவனமெடுத்துப் படித்த முரளி புலமைப் பரிசில் பரீட்சையும் எழுதினான். அவன் சித்தியடைவான் என்ற நம்பிக்கை அவனுக்கு மட்டுமன்றி அம்மாவுக்கும் வாத்தியாருக்கும் கூட இருந்தது.

நாம் நினைப்பது ஒன்று நடப்பது வேறொன்று ராமாயிக்கு மாதவிலக்கின் போது இரத்தப் பெருக்கு ஏற்பட்டு மயக்க முற்றாள். தோட்ட ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்ற போது உடனடியாக சேலைன் ஏற்றி. பெரியாஸ்பத்திரிக்கு தோட்ட வைத்தியர் அனுப்பிவைத்தார். குன்றும் குழியுமான பாதையில் வாகனம் சென்ற போது குலுக்களில் இன்னும் அதிகமான இரத்தம் வெளியேறியது. பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு சென்ற போது ராமாயியைக் காப்பாற்ற முடியவில்லை. ஏற்கெனவே போஷாக்கின்மையினால் இரத்த சோகையால் பீடிக்கப்பட்டிருந்த அவளால் இரத்த இழப்பைத் தாங்கி கொள்ள முடியவில்லை. தீவிர சிகிச்சையும் பலனளிக்காமல் இறந்து போனாள்.

அம்மாவைக் கொண்டு வந்து லயக் காம்பராவில் வளர்த்திய போது முரளியும் சித்திராவும் பெரும் குரலெடுத்து அழுதனர். அவர்கள் அழுததைப் பார்த்து முழுத்தோட்டமுமே கண்ணீர் விட்டது. அம்மாவின் பிரிவு சித்திராவுக்கும் முரளிக்கும் பேரிடியாக அமைந்துவிட்டது. அப்பனின் கெடுபிடியும். அட்டகாசமும் அவர்களை வதைத்தது. சில நாட்களிலேயே வேலசாமி மூலம் அவர்கள் இருவரையும் வீட்டுவேலைக்கு அனுப்பிவிட்டு இன்னொரு கலியாணமும செய்து கொண்டான் காளிமுத்து.

சித்திரா வேலைக்குப் போன இடத்தில் கடுமையான வேலைகளும் துன்புறுத்தலும் இருந்தாலும் முரளி வேலைக்குச் சென்ற இடம் பரவாயில்லை. பூந்தோட்டத்திற்கு தண்ணீர் ஊற்றுவது, வீடு வாசல் கூட்டித் துப்பரவாக்குவது, நாயைக் குளிப்பாட்டுவது என குறிப்பிட்ட வேலைகளே இருந்தன. சாப்பாட்டு விசயத்திலும்



குறையிருக்கவில்லை. முதலில் அவனைப் பார்த்ததும் உறுமிய அல்சேசன் நாயும் இப்போது அவனோடு சினேகிதமாகி விட்டது. வீட்டுக்காரரின் மகன் நிசாந்தனுக்கும் அவனது வயது தான். அவன் பாவித்துக் கழித்த உடைகள் இவனுக்குக் கிடைத்தன. அவைகூட மிகவும் தரமானவையாக இருந்தன.

நிசாந்தன் மகன் பள்ளிக்கூடம் வெளிக்கிட்டுப் போகும் போது முரளியின் மனதில் அவனையும் மீறி ஒரு வித ஏக்கமும் குடிகொள்ளும். புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் எப்போது வரும்? நான் பாஸ் பண்ணுவேனா? என யோசிக்கும் போது நெஞ்சம் உருகும்.

நிசாந்தன் நகரிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில படித்துக் கொண்டிருக்கிறான். போதாதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் தனிப்பட்ட வகுப்புகள் வீட்டுக்கு வந்த பிரபலமான ஆசிரியர்கள் படிப்பிப்பார்கள். புலமைப் பரிசில் பரீட்சைக்குத தயார் படுத்திய காலத்திலும் இப்படித்தான். நாட்கள் நகர்ந்தன. ஒரு நாள் வீட்டிலே எல்லோரும் எதையோ ஆவலோடு எதிர்பார்த்திருப்பது முரளிக்குப்

புரிந்தது. "அம்மா கணனியில் பரீட்சை முடிவுகள் வெளிவருகுதாம்" முரளி உற்சாகமாகக் கூறினான். தாயும் உற்சாகமாக, கூக்கூநீ பாஸ் பண்ணுவே நிசாந்தன்" என்று கூறினாள் மாதர் சங்கத்தின் மகனின் பரீட்சை முடிவு பற்றி பெருமிதமாக தம்பட்டமடிக்கும் கனவில் மிதக்க ஆரம்பித்து விட்டாள். முரளிக்கு தானும் பரீட்சை எழுதியது நினைவுக்கு வந்தது. பெருமூச்சு விடுவதைத் தவிர அவனால் வேறொன்றும் செய்யமுடியவில்லை.

நிசாந்தன் பரீட்சையில் சித்தியடைவான் என்று வீட்டில் எல்லோரும் நம்பியது போலவே முரளியும் எதிர்பார்தான். ஆனால் பெறுபேறு வேறு விதமாக அமைந்து விட்டது. மூன்று புள்ளிகளால் நிசாந்தன் சறுக்கி விட்டான்.

நிசாந்தன் அன்று முழுவதும் சாப்பிடாமல் அழுது கொண்டிருந்தான். அதைவிட அவனது பெற்றோர்களும் மிகுந்த கவலையில் இருந்தனர். முரளிக்கும் தனது பரீட்சை முடிவு பற்றி அறிய ஆசையாக இருந்தது. தோட்டத்தில் யாரோடும் தொடர்பில்லை. அப்பனும் இந்தப் பக்கம் திரும்பிப் பார்ப்பது கூட இல்லை.

இதே சமயம் அவனது தோட்டப்பாடசாலையில் ஆசிரியர் பெருமகிழ்ச்சியில் குதூகலித்திருந்தார். அந்தப் பாடசாலை ஆரம்பித்து ஐம்பது வருடங்களுக்கு மேலான போதும். இம்முறை தான் முதற்தடவையாக ஒரு மாணவன் - முரளி புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்திருக்கிறான். வாத்தியார் ஒரு புறம் மகிழ்ந்தாலும், முரளி படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்குப் போய்விட்டானே என்ற ஆதங்கம்!

தனது அபிமான மாணவனின் வெற்றி மீதான களிப்பிலும், அவனது எதிர்காலத்தின் மீதான அக்கறையிலும் வாத்தியார் காளிமுத்துவிடம் வீடு தேடிச் சென்ற போது அவன் நிறை வெறியில் ஒத்தாப்பில் கிடந்தான். முரளி அரசாங்கப் பரீட்சையில் சித்தியடைந்தது பற்றி அவர் கூறிய போதும், காளிமுத்து எது வித உற்சாகமும் காட்டவில்லை.

"காளிமுத்து ... உன்னுடைய மகன் தான் முதன் முதலாக இந்தத் தோட்டப் பாடசாலையில் இருந்து பாய் பண்ணியிருக்கிறான். இனிமே அவனட படிப்புக்கு கவண்மேந்து காசு கொடுக்கும்.. மாசம் ஐந்நூறு ரூபா கொ்டுக்கும்....." என்று கூறிய ஆசிரியரை முறைத்துப் பார்த்தபடி "சும்மா போங்க வாத்தியாரு..." என்று காறி உமிழ்ந்தான்.

படிப்பின் அருமை பெருமை தெரியாமல், பெற்ற பிள்ளையின் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்காத அவன் மீது வாத்தியாருக்குக் கோபம் தான் வந்தது.

"மகன்ட விலாசமாவது இருந்தா கொடு காளிமுத்து..." கெஞ்சாத குறையாக கேட்டார். காளிமுத்து விதண்டா வாதமாக பதிலளித்தார். "அவன்ட அட்ரஸ் யாருக்குத் தெரியும்..?... இதை விட மாசாமாசம் கூடுதலாக உழைச்சு ஐயாயிரம் அனுப்புறான்... சும்மா போய் உங்கட சோலியைப் பாருங்க சேர்..."

வாத்தியார் ஏமாற்றத்துடன் திரும்பிய அதே வேளை, கொழும்பில் முரளிக்கு இருப்புக் கொள்ளவில்லை எப்படியும் பரீட்சையில் சித்தியடைந்திருப்பேன் என்று அவனது மனதில் ஒலித்துக்கொண்டே இருந்தது. தனது ஆதங்கத்தை ஒருவாறு நிசாந்தனிம் கூறினான்.

இதைக் கேட்ட நிசாந்தன், "இதுக்கா யோசிக்கிறே? கொம்பியூட்டரில உன்ர ரிசல்ட்டைப் பார்த்து சொல்லுறன்..." என அவனிடம் விபரங்களைப் பெற்றுக கொண்டு கணனி அறைக்குள் சென்றான். அறைக்குள் சென்ற நிசாந்தனின் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்தான் முரளி.

"அம்மா முரளி பாஸ் பண்ணியிருக்கிறான்.." என்று உற்சாகமாகக் கூறியபடி வெளிக்கிட்ட நிசாந்தனை தாயார் மறித்தார் "இதை அவன் கிட்ட சொல்லாத பெயில் என்று சொல்லு.." தாயாரின் அதட்டலின் நிசாந்தனின் கள்ளங் கபடமற்ற குழந்தை உள்ளம் கூம்பிப் போனது. அவன் திகைத்து நிற்கையிலே வெளியே சென்ற நிசாந்தனின் தயார். "முரளி.. நீ பெயிலடா.. நிசாந்தனே பாஸ் பண்ணாத பரீட்சையில நீயாவது பாஸ் பண்ணுறதாவது..." என்றாள்.

முரளியின் முகம் ஏமாற்றத்தில் தொங்கியது ஏனோ அம்மாவின் நினைவு அவன் மனதில் தோன்றியது.


# பூபாலசிங்கம் புத்தகசாலை



புத்தக விற்பனையாளர்கள்,
ஏற்றுமதி, இறக்குமதியாளர்கள்,
நூல் வெளியீட்டாளர்கள்...

தலைமை: இல. 340, 202, செட்டியார் தெரு, கொழும்பு-11
தொலைபேசி: 2422321, தொலைநகல்: 2337313, மின்னஞ்சல்: pbdho@sltnet.lk

கிளை: இல. 309-2/3, காலி வீதி, கொழும்பு-06.
தொலைபேசி: 4 515775, 2504266.

கிளை: இல. 04, ஆஸ்பத்திரி வீதி,
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

# தமிழ் மக்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி

# BARRISTER S.J.JOSEPH


# பாரிஸ்டர் செ. யோ. யோசேப்

நேரடியாக உங்கள் வழக்குகளை
ஆராய்ந்து சொலிசிற்றர்
இல்லாமலேயே நீதிமன்றத்தில்
ஆஜராக உரிமை பெற்றுள்ளார்.
இதுதவிர, Home Office விண்ணப்பங்கள்,
உயர்நீதிமன்றத்தில் இடைக்காலத் தடைக்கான
உத்தரவு பெறல்
போன்ற சகலவற்றுக்கும்...



தென் லண்டனில்
90. HIGH STREET,
COLLIERS WOOD LONDON Sw19 2BT

CHAMBERS OF BARRISTER JOSEPH
39, HERMITAGE ROAD, LONDON N4 1LU. 020 8809 3083, 07831 594 270


உறுதியும்
உத்தரவாதமும்
கொண்ட தங்கநகைகளுக்கு
நாகலிங்கம்
ஜுவலர்ஸ்
Entirely
a New Look
Jewellery,
that wil no doubt
appeal to all
who love
the 22ct Gold
NAGALINGAMS
101
COLOMBO STREET, KANDY.
T.P: 081 2232545

100 நாள் வேலைத்திட்டம்



அதிமேதகு மைத்திரிபால சிறிசேன
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின்
ஜனாதிபதி




கௌரவ ரணில் விக்ரமசிங்க, பா.உ.
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின்
பிரதமர்



கௌரவ பழனி திகாம்பரம், பா.உ.
பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி
அமைச்சர்

# மீரியபெத்தை மண்சரிவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு புதிய வீடமைப்புத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம்



## கௌரவ பழனி திகாம்பரம், பா.உ.

பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர்
அவர்களின் முன்னெடுப்பில்

**2015 மார்ச் மாதம் 01ஆம் திகதி**
**காலை 10.00 மணிக்கு**

**பதுளை மாவட்டம் மஸ்கெலிய பெருந்தோட்ட கம்பனியின் பூனாகல தோட்ட பூனாகல பிரிவில் இடம்பெறவுள்ளது.**



திரு. வே. சிவஞானசோதி
செயலாளர்
பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு



கௌரவ ஹரின் பிரனாந்து
ஊவா மாகாண சபை
முதலமைச்சர்



கௌரவ கே. வேலாயுதன், பா.உ.
பெருந்தோட்ட கைத்தொழில்
இராஜாங்க அமைச்சர்



கௌரவ வீ.எஸ். ராதாகிருஷ்ணன், பா.உ.
கல்வி
இராஜாங்க அமைச்சர்



கௌரவ மனோ கணேசன்
மேல் மாகாண சபை உறுப்பினர்


**பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு**
இல. 45. சென் மைக்கல்ஸ் வீதி, கொழும்பு 03. இலங்கை.
தொலைபேசி - 2541369 தொலைநகல் - 2328117 மின்னஞ்சல் - smpid@sltnet.lk


நகர அபிவிருத்தி அதிகாரசபை